# 2015

# 8ஆவது தொகுதி பகுதி – II

## பொருளடக்கம்

மத்திய கிழக்கு வேலை வாய்ப்பிற்காக வெளிநாடு செல்லும் பணியாளர்கள் தொடர்பில் தொடர்புடைய அரச நிறுவனங்களின் ஈடுபாடு.

# மத்திய கிழக்கு வேலை வாய்ப்பிற்காக வெளிநாடு செல்லும் பணியாளர்கள் தொடர்பில் தொடர்புடைய அரச நிறுவனங்களின் ஈடுபாடு



**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**

**செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வுப் பிரிவு**

## உள்ளடக்கம்


| உள்ளடங்கியுள்ள விடயங்கள் | | பக்க இல |
|---|---|---|
| 1. | நிறைவேற்றும் பொழிப்பு | 3-4 |
| 2. | அறிமுகம் | |
| 2.1 | மத்திய கிழக்கு சேவை நாடுனர் | 5-8 |
| 2.2 | கணக்காய்விற்கான அதிகாரம் | 8 |
| 2.3 | தலைப்பை தெரிவு செய்தல் | 8-9 |
| 2.4 | செயலாற்றல் கணக்காய்வின் நோக்கங்கள் | 9 |
| 2.5 | வரையரைகள் | 10 |
| 3. | விரிவான கணக்காய்வு அவதானிப்புக்கள் பரிந்துரைகள் மற்றும் நிறுவனங்களின் கருத்துரைகள் | |
| 3.1 | உழைப்பாளிகள் வெளிநாடு செல்லல் | 10-16 |
| 3.2 | பெண்கள் வெளிநாடு செல்வதால் ஏற்படும் சமூக தாக்கங்கள் | 16-20 |
| 3.3 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான பொது அவதானிப்புக்கள் | 20-29 |
| 3.4 | தொடர்புடைய ஏனைய நிறுவனங்கள் பற்றிய பொது அவதானிப்புக்கள் | 29-33 |
| 3.5 | தரவு மற்றும் தகவல் பேணிச் செல்லல் | 33-41 |
| 3.6 | தொழில் முகவர் நிறுவனங்களின் கடமைப்பாடுகள் | 41-57 |
| 3.7 | பிரச்சினைகளுக்கு துாதரகங்கள் மட்டத்திலான ஈடுபாடு | 57-69 |
| 4. | திரட்டிய முடிவுரை | 70-71 |

நிறைவேற்று பொழிப்பு

20,771 மில்லியனான இலங்கையின் ஒட்டுமொத்த சனத்தொகையில் மொத்த ஊழியப்படை 8.8 மில்லியனாக இருந்தது. இந்த ஊழியப் படையின் விகிதமாக தொழிலில் ஈடுபட்டுள்ள ஆளணி 95.7 சதவீதமாக இருந்ததுடன், தொழிலின்மை வீதம் 4.3 சதவீதமாக இருந்தது. இந்நிலைமையின் கீழ் தொழிலுக்காக 2014 ஆம் ஆண்டின் போது 300,703 தொழிலாளர்கள் வெளிநாடு சென்றிருந்ததுடன், அதில் 36.7 சதவீதம் பெண்களாவர். வெளிநாடு செல்லும் தொழிலாளர்களில் அநேகமானோர் சவுதி அரேபியா, குவைட் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுவேலைகளுகக்காக வெளிச்சென்றுள்ளதுடன் அது 86.1 சதவீதமாக உள்ளது. இவ்வாறு வெளிநாடு செல்லும் மொத்த இலங்கையர்களால் உழைக்கப்படுகின்ற ஒட்டுமொத்த தனியார் உழைப்பு அந்நியச் செலாவணியில் மத்திய கிழக்கு நாடுகளில் சேவை புரியும் இடம்பெயர் தொழிலாளர்களினால் உழைக்கும் வெளிநாட்டு அந்நியச் செலாவணி அண்ணளவாக சுமார் 56.8 சதவீதமாக இருந்தது.

கடந்த ஆண்டுகளில் வெளிநாட்டு தொழில் வாயப்பிற்காக வெளியேறிச் செல்லல் துரிதமாக அதிகரித்திருந்ததுடன் வெவ்வேறு பிரச்சினைகள் தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் அதிகரித்தும் காணப்பட்டன. இம்முறைப்பாடுகளை தீர்வுசெய்வதற்காக வெளிநாட்டு தொழில் மேம்படுத்தல் மற்றும் நலன்புரி அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் என்பன ஈடுபாட்டினைச் செலுத்துகின்றன.

இலங்கைக்கு அந்நியச் செலாவணி உழைப்பிற்கு கூடியளவில் பங்களிப்பினை பங்களிப்பொன்றை வழங்கும் புலம்பெயர் தொழிலாளர்களில் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களுக்காக அவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக செல்ல முன்னர் மற்றும் வெளிநாட்டு தொழிலில் ஈடுபடும் போதும் அவர்கள் இலங்கைக்கு வந்ததன் பின்னரும் அரசாங் நிறுவனமொன்றின் ஈடுபாட்டை செயற்திறனையும் வினைத்திறனையும் மதிப்பீடு செய்தல் இச்செயலாற்றல் கணக்காய்வின் நோக்கமாகும்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகளில் அநேகமான முறைப்பாடுகள் வீட்டு வேலைக்காக வெளியேறும் பெண்களுடையதென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதில் அவர்கள் உடல் ரீதியாக மற்றும் உளரீதியான துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தல், எசமானர்களால் தொழில் உடன்படிக்கைகளை மீறுதல் உரிய உடல் மற்றும் ஒள ரீதியான தகைமையில்லாத நபர்கள் வெளிநாடு செல்வதால் பிரச்சினைகள் ஏற்படுதல் போன்ற விடயங்கள் முக்கியத்துவத்தை எடுப்பதுடன் அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஈடுபாடு போதியளவில் இல்லாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

தொழிலாளர்களை வெளிநாடு செல்வதற்கு முன்னர் வழங்கப்படும் பயிற்சி நிகழ்ச்சிகள் முக்கியமாக இருப்பதால் அவற்றிலிருந்து எதிர்பார்க்கும் பிரதான விடயமொன்றான பயிற்சி நிலையத்தில் சிறிய பிள்ளைகள் இருக்கும் தாய்மாரை இனங்காணுதல், உள மற்றும் உடல் ரீதியான குறைபாடுகளை இனங்காணப்பட்டதன் பின்னர் அத்தொழிலாளர்களை கறுப்பு பட்டியலுக்கு உட்படுத்தல், வெளிநாடு செல்லும் தொழிலாளர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தும் போது கருத்தரிக்கும் நிலைமை மற்றும் ஏனைய நோய் இலட்சணங்களை இனங்காணுதல், போலி மருத்துவ சான்றிதழ்களை வழங்குதல் போன்ற சம்பவங்கள் தொடர்பில் உரிய நிறுவனங்கள் முறையான கவனமொன்றைச் செலுத்தாதிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

ஆட்பதிவுத் திணைக்களம், பதிவாளர் நாயகத் திணைக்களம் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் போன்ற நிறுவனங்கள் தரவு முறைமையொன்றுடாக தொடர்புபடுத்தப்படாமையால் போலியான தகவல்களை வழங்கி கடவுச்சீட்டுக்களைப் பெற்று குறைந்த வயதுடையவர்களை தொழிலாளர்களாக வெளிநாடு செல்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அது மேற்குறிப்பிட்ட வலையமைப்பினை ஸ்தாபிப்பதில் அவசர தேவைப்பாடொன்றாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு அதிகளவில் பங்களிப்பினை வழங்கும் தொழிலாளர்களின் நலன்கள் தொடர்பில் போதியளவில் அரசின் கவனம் செலுத்தப்படல் அத்தியவசியமாக உள்ளது.

இடம்பெயர் தொழிலாளர்கள் அன்றாடம் முகங் கொடுக்கும் பிரச்சினைகளை குறைத்துக் கொள்வதற்காக வெளிநாடு செல்வதற்கு முன்னர் அந்நாடுகளில் உள்ள சட்டங்கள், மொழி தொடர்பாக போதியளவு பயிற்சியொன்றை வழங்குதல் சேவை நிலையத்தில் வேலை செய்ய வேண்டிய முறை தொடர்பாக அறிவுட்டுதல் போன்ற பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு கட்டாயமாக உடல் மற்றும் உளரீதியான தகைமையுடைய பயிற்சியெற்ற தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புதல் மற்றும் வெளிநாடு சென்றதன் பின்னர் அவர்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளல், பொருத்தமற்ற சேவை நிலையங்கள் மற்றும் சேவைநாடுனர்களை கறுப்பு பட்டியலுக்கு உட்படுத்தல்என்பவறன முடிவுகளாகும். இங்கு போலியான தகவல்கள் மூலம் தொழிலாளர்களை வெளிநாட்டிற்கு அனுப்பு முகவர்களின் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்து சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் பிரயாண அனுமதிப்பத்திர உடன்படிக்கை கைச்சாத்திடும் போது முகவர்களினால் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணத்தை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தலையிட்டு இடம்பெயர் தொழிலாளர்களுக்கு வழங்கும் வேலைத்திட்டமொன்று அமுலாக்குவது அவசியமாகும்.

இதற்கு மேலதிகமாக பெண்களை தொழிலுக்காக வெளிநாடு சென்றதன் பின்னர் குடும்ப கூட்டுறவு நலிவடையும் நிலைமை எந்நேரமும் அறிக்கையிடப்படுவதுடன் இது பாரிய சமூக சிக்கலொன்றாக மாறியுள்ளதால் அது தொடர்பாக உரிய நிறுவனங்கள் கவனத்தைசெலுத்தும் தேவைப்பாடு கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

## 2. அறிமுகம்

### 2.1 மத்திய கிழக்கு சேவை

#### 2.1.1 மத்திய கிழக்கு ஊழியச் சந்தையின் பின்னணி

மத்திய கிழக்கு வலய நாடுகளில் பெற்றோலிய விலை அதிகரிப்புடன் அந்நாடுகளின் வருமானம் அதிகரித்தமை அதாவது பெற்றோலிய உற்பத்தியின் (Oil Boom) பெறுபேறாக அந்நாடுகளின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக தொழிலாளர்களின் தேவை அதிகரித்தது. அதன் பிரகாரம் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக பல்வேறு அபிவிருத்தி செயற்பாடுகளை ஆரம்பித்ததன் விளைவாக பயிற்சி பெற்ற அல்லது பயிற்சி பெறாத மட்டத்திலான பணியாளர்களுக்காக பாரியளவு கேள்வியொன்று ஏற்பட்டது. அவ்வாறே பெற்றோலிய விலைகள் அதிகரித்ததனூடாக மத்திய கிழக்கு வலயத்தின் வீடுகளில் வீட்டுப் பணிப்பெண்களை வைத்துக் கொள்ளல் தமது அந்தஸ்திற்கு தேவையான இன்னுமொரு முக்கிய காரணியாக இருந்தது. அதன் பிரகாரம் இப் புதிய ஊழியச் சந்தை நோக்கி பாரியளவில் பணியாளர்கள் குடிபெயர் ஆரம்பித்ததுடன், இலங்கையருக்கும் மத்திய கிழக்கு தொழில்சந்தையானது திறந்து விடப்பட்டது.

அவ்வாறே 1976 இல் இலங்கையில் நடைபெற்ற அணிசேரா மாநாட்டின் போது இலங்கை பணியாளர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கு மத்திய கிழக்கு நாடுகள் இணக்கப்பாட்டை தெரிவித்திருந்தமை, 1977 ஆம் ஆண்டின் போது திறந்த பொருளாதாரக் கொள்கை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டமை போன்ற விடயங்களுடன் நடுத்தர மட்டத்தினர் பாரியளவில் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக இடம் பெயர் ஆரம்பித்தனர்.

இவ்வாறு இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக இடம் பெயர்தலுடன் உள்நாட்டு பொருளாதாரத்தில் ஏற்படுத்தப்பட்ட முக்கிய தாக்கம் தொடர்பாக கருத்திற் கொண்டு அரசின் கவனமும் இப் புதிய ஊழியச் சந்தைக்குச் சென்றது. இதன் பிரகாரம் வெளிநாட்டு தொழில் துறையில் முறையாகவும் படிப்படியாகவும் பேணிச் செல்லும் தேவைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு 1985 இன் 21 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்திற்கமைவாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆரம்பிக்கப்பட்டது.

**2.1.2 இலங்கை பொருளாதாரத்திற்கு மத்திய கிழக்கு பணியாளர்களின் பங்களிப்பு**

(அ) வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக குடியகழ்ந்த பணியாளர்கள் தொடர்பான விபரங்கள்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வெளியிடப்படும் வருடாந்த புள்ளி விபரங்களின் பிரகாரம் வெளிநாடு சென்ற பணியாளர் எண்ணிக்கை பின்வருமாறு காணப்பட்டது.

**பிரயாணத்தின் பிரகாரம் வெளிநாட்டு சேவை இடம்பெயர்வு**

| நாடு | 2010 சதவீதம் | 2011 சதவீதம் | 2012 சதவீதம் | 2013 சதவீதம் | 2014 சதவீதம் |
|---|---|---|---|---|---|
| சவுதி அரேபியா | 26.92 | 31.48 | 26.07 | 34.68 | 26.76 |
| குவைட் | 18.74 | 17.15 | 19.26 | 15.66 | 14.48 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | 20.43 | 16.03 | 14.95 | 13.56 | 16.74 |
| கட்டார் | 15.76 | 17.76 | 20.06 | 20.36 | 28.14 |
| ஏனைய | 18.15 | 17.59 | 19.66 | 15.73 | 13.87 |

**(ஆ) அந்நிய செலவாணி உழைப்பு**

வெளிநாடுகளில் சேவை புரியும் மொத்த இலங்கையர்களால் உழைக்கப்படும் வெளிநாட்டு அந்நியச் செலவாணியிலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் அளவு மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் சேவை புரியும் தொழிலாளர்களினால் அனுப்பப்பட்ட அந்நியச் செலவாணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2011 ரூபா மில்லியன் | 2012 ரூபா மில்லியன் | 2013 ரூபா மில்லியன் | 2014 ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|
| ஒட்டு மொத்த தனியார் உழைப்பாளி செலவாணி | 569,103 | 763,980 | 827,689 | 916,344 |
| மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து உழைப்பாளிகளின் செலவாணி | 335,201 | 438,525 | 460,195 | 509,487 |
| மத்திய கிழக்கு (சதவீதம்) | 58.9 | 57.4 | 55.6 | 55.6 |

(மூலம் இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2014)

இதன் பிரகாரம் ஒட்டு மொத்த குடி பெயர்ந்தவர்களின் செலவாணியில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு குடிபெயர்ந்த நபர்களால் உழைக்கப்பட்ட அந்நியச் செலவாணி 56.8 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக குடியகழ்ந்த ஊழிய வகையின் பிரகாரம் பின்வருமாறு.

| உழைப்பு வகை | 2013 எண்ணிக்கை | சதவீதம் | 2014 எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|---|
| திறன் தொழில்சார் | 5,151 | 1.8 | 5,372 | 1.8 |
| மத்திய தொழில்சார் | 16,510 | 5.6 | 20,778 | 6.9 |
| எழுதுனர் மற்றும் அதற்கு சமமான பணியாளர்கள் | 26,561 | 9.1 | 29,267 | 9.7 |
| பயிற்சி பெற்ற பணியாளர்கள் | 73,707 | 25.1 | 73.162 | 24.3 |
| அரைப் பயிற்சி பெற்ற | 3,412 | 1.2 | 3,977 | 1.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| பணியாளர்கள் | | | | |
| பயிற்சி பெறாத பணியாளர்கள் | 70,977 | 24.2 | 79.519 | 26.4 |
| வீட்டுப் பணிப் பெண்கள் | 96,900 | 33.0 | 88,628 | 29.5 |

இதன் பிரகாரம் உள்நாட்டு தொழில் முகவர்கள் இலத்திரனியல் மற்றும் அச்சிட்டு ஊடகங்களின் மூலம் மேற்கொண்ட விளம்பரங்கள், இலங்கையில் தொழிலின்மை, வறுமை மற்றும் வெளிநாடு செல்லும் குடும்பங்களால் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளப்படும் பௌதீக ரீதியான அபிவிருத்தி தொடர்பாக ஈர்க்கப்பட்டமை போன்ற காரணங்களினால் பெண்கள் வீட்டு வேலைக்காக முன்வரும் போக்கொன்று காணப்பட்டது. அவ்வாறே வெளிநாடு செல்வதற்கு முன்னர் வேலைவாய்ப்பு முகவர்களினால் ரூபா 100,000 இற்கு அண்மித்த பணத்தை வீட்டுப் பணிப்பெண்களுக்கு வழங்குதல் மற்றும் வீட்டு வேலைக்கு செல்வதற்காக அவர்களிடமிருந்து பணம் அறவிடப்படாமை போன்ற காரணங்களால் வீட்டு பணிப்பெண்களாக, பெண்கள் வெளிநாடு செல்வதற்கான முக்கிய காரணங்களாக அமைந்திருந்தன.

### 2.1.3 மத்திய கிழக்கு மற்றும் வீட்டுப் பணிப்பெண் சேவையில் சமூகரீதியாக தாக்கம்

அந்நியச் செலவாணி உழைப்பு, மத்திய கிழக்கு வீட்டுப்பணிப்பெண் வேலைக்காக தொடர்புபட்டிருந்தமைக்கான அடிப்படை நோக்காக இருந்தது. அதன் பிரகாரம் மொத்த தனியார் அனுப்புகையில் 56.8 சதவீதமான பங்களிப்பு இத்துறை மூலம் உழைக்கப்படுவதுடன், அவ்வாறு வெளிநாடு செல்லும் தொழிலாளர் குடும்பங்களின் வாழ்க்கை நிலைமை அரசின் மானியங்கள் மீது தங்கும் நிலைமை குறைவடைந்து சுயமாக பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு இதன் மூலம் முடியுமாக இருந்தமை முக்கியமான நன்மையொன்றாகும். மேலும் இவ்வாறு வெளிநாடு செல்லும் ஊழியத்தின் அதிகளவிலானோர் வீட்டு வேலை தவிர வேறு தொழிலில் ஈடுபட்டு தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பை வழங்குவதற்குக் கூட கல்வி மற்றும் தொழில்சார் பயிற்சியொன்றைப் பெற்றுக் கொண்ட நபர்கள் அல்லாத காரணத்தினால் விளைவற்றுக் காணப்பட்ட ஊழிய வளங்களை ஆக்கபூர்வமாக நாட்டின் பொருளாதாரத்திற்கு உறிஞ்சக்கூடியதாக இருந்தமை இத்துறை மூலம் உருவாகியுள்ள நல்ல பெறுபேறொன்றாகும்.

எவ்வாறாயினும் வீட்டுப் பணிப்பெண்கள் எதிர் நோக்கும் பல இம்சைகள், சேவை நிபந்தனை மீறப்படுவதால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தவிர, விஷேடமாக தாய் வெளிநாடு செல்வதால் பிள்ளைகள் மற்றும் கணவனுக்கு இடையில் இருக்க வேண்டிய அன்னியோன்னிய உறவுகள் விரிசலடைதல் போன்ற விடயங்கள் இத்துறையால் ஏற்படுத்தப்படுகின்ற பாதகமான நிலைமையொன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

இலங்கை போன்ற தாயை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட குடும்ப பின்னணியில் தாயிடமிருந்து தூரமாகுதல் பிள்ளைகளின் மன நிலைமை பாதிப்படைவதற்கு வழிவகுப்பதுடன் கல்வி மட்டம் வீழ்ச்சியடைதல் உட்பட, பிள்ளைகள் பாதுகாப்பற்று இருத்தல் இதன் பயங்கர பெறுபேறொன்றாகும். அவ்வாறே மனைவியிடமிருந்து பிரிவதால் கணவன் போதை பொருளுக்கு அடிமையாதல் மற்றும் முறையற்ற தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல் போன்ற நிலைமை பொதுவாக இதன் மூலம் உருவாவதுடன் குடும்பக் கோட்பாடு சரிதல். சமூக முறைமை பாதிப்படைதல் போன்ற சமூக கோட்பாடுகளுக்கு அதிகளவில் தாக்கமளிக்கின்றது.

## 2.2 கணக்காய்விற்கான அதிகாரம்

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 ஆவது உறுப்புரையின் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 2.3 தலைப்பினை தெரிவு செய்தல்

மத்திய கிழக்கு நாடுகளில் சேவை புரியும் பணியாளர்கள் விஷேடமாக வீட்டுப் பணிப்பெண்கள் எதிர் நோக்கும் பல பிரச்சினைகள் மற்றும் அதன் காரணமாக அவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் தாக்கங்கள் மற்றும் மரணங்கள் தொடர்பாக நாளாந்தம் ஊடகங்களினூடாக அறிவிக்கப்படுகின்றன. இதற்கு தாக்கமளிக்கும் காரணங்களை இனங்காணுதல் மற்றும் இவ்வாறான சிக்கலான நிலைமைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு வெளிநாடு செல்லும் பணியாளர் உரிமைகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள சட்டங்கள் விதிகள் குறைபாடுகளுடன் கூடியதாக இருந்த போதிலும் ஏதேனும் கட்டுப்பாடொன்றை ஏற்படுத்தக் கூடிய போதிலும் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்களிலிருந்து அதற்கான செயற்பாடுகளை முறையாக நிறைவேற்றாத சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. ஆதலால் இலங்கைப் பணியாளர்களின் குடும்பங்களில் பிரச்சினைகள் பற்றி உரிய நிறுவனங்கள் போதியளவு கவனத்தைச் செலுத்துதல் அத்தியாவசியமாக இருப்பதால், அந் நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக செயலாற்றல் கணக்காய்வினை மேற்கொள்வதற்குரிய காரணங்களாக இருந்தன.

## 2.4 செயலாற்றல் கணக்காய்வின் நோக்கங்கள்

பின்வரும் விடயங்களின் மதிப்பீடு இதற்கு உரியதாகும்.

(அ) இலங்கையுடன் மத்திய கிழக்கு நாடுகள் மேற்கொண்டுள்ள இரு தரப்பு உடன்படிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் உடல், உள தகைமையுடன் கூடிய பணியாளர்கள் வெளிநாடு செல்கின்றனரா எனவும்,

(ஆ) வெளிநாடு சென்ற தொழிலாளர்களுக்குரித்தாக கிடைக்கும் முறைப்பாடுகளின் தீர்க்கும் நடைமுறை தொடர்பாகவும்,

(இ) இடம் பெயரும் தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபடுத்துவதற்கு முன்னர், நன்றாக மொழி மற்றும் தொழிற்பயிற்சி வழங்கப்படுகின்றதா எனவும்,

(ஈ) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பிரிவின் மூலம் ஊழியர்களுக்கு வினைத்திறனான மற்றும் செயற்திறனான சேவையொன்று பெற்றுக் கொள்ளப்படுகின்றதா எனவும்,

(உ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் முகவர் நிறுவனங்கள் வெளிநாடு செல்லும் பணியாளர்களுக்கு செயற்திறனான மற்றும் வினைத்திறனான சேவையொன்றை வழங்குகின்றார்களா எனவும்,

(ஊ) மத்திய கிழக்கு நாடுகளில் அமைந்துள்ள இலங்கையின் தூதகர அலுவலகங்களில் நிறுவப்பட்டுள்ள தொழிலாளர் அலுவலகங்களில் உள்ள பாதுகாப்பு இல்லங்களிலிருந்து (Safe House) இடம்பெயர் தொழிலாளர்களுக்கு வினைத்திறனான சேவையொன்று வழங்கப்படுகின்றதா எனவும்,

## 2.5 வரையரைகள்

இக்கணக்காய்வினை மேற்கொள்ளும் போது மத்திய கிழக்கு நாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதுவர் அலுவலகங்களில் அல்லது அதில் பேணப்படும் பாதுகாப்பு வீடுகளிலிருந்து தேவையான தகவல்கள் நேரடியாக பெற்றுக் கொள்வதற்கு அவசியமான போதிலும் அதற்காக தொடர்புபடுவதற்கு வெவ்வேறு வரையரை நிலைமைகள் காணப்பட்டதால் வேறு மாற்று நடைமுறைகளின் கீழ் உரிய தகவல்கள் பெற்றுக்கொள்ள நேர்ந்தது.

3. விரிவான கணக்காய்வு பரிசோதனைகள், பரிந்துரைகள் மற்றும் நிறுவனத்தின் கருத்துரைகள்

3.1 பணியாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புதல்

3.1.1 வெளிநாடு செல்வதற்கு பொருத்தமான பணியாளர்களை இனங்காணுதல்

இலங்கை வெளிநாட்டு சேவைகள் பணியகத்தின் மூலம் பணியாளர்களை பயிற்சியளிப்பதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயற்பாட்டுக் கைநூலின் 11 ஆம் பகுதியின் நோக்கம் பொருத்தமற்ற மற்றும் பிரச்சினைக்குரியவர்கள் வெளிநாடு செல்லும் போது ஏற்படும் பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்வதேயாகும். அவ்வாறே குடும்பத்தினதும் சமூக பிரச்சினைகள் காணப்படுகின்ற அல்லது உடல்சார்ந்த, மனநிலை சுகாதாரப் பிரச்சினைக்குரியவர்களை வெளிநாடு செல்வதனைத் தவிர்த்தலாகும். இங்கு பால்குடிக்கும் பிள்ளைகள் இருக்கின்ற உடல், உள மற்றும் சுகாதார பலவீனங்கள் காணப்படுகின்ற அல்லது தவறான தகவல்களை சமர்ப்பிக்கும் நபர்களை கருப்பு பட்டியலில் உள்ளடக்குதல் என்பவற்றுக்காக பயிற்சி நடவடிக்கைகளுக்கு உட்படுத்த வேண்டுமென மேற்குறித்த கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே பயிற்சிக் காலப் பிரிவினுள் மேற்கொள்ளப்படும் உடற்பயிற்சிகளின் போது தமது உடற் தகைமைகளை உறுதிப்படுத்தாமல் இருந்தால் அல்லது சுகாதார நிலைமையை பேணிச் செல்வதற்காக மருந்துகள் பயன்படுத்துபவர் என உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களையும் பயிற்சியிலிருந்து அகற்ற வேண்டுமென 2012 செப்தம்பர் 12 ஆந் திகதி பொது முகாமையாளர் சுற்றறிக்கை பயிற்சி 02/2012 மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பயிற்சியளிக்கப்படும் காலப்பகுதியில், இப் பயிற்சியானது முறையாக இடம் பெறுவதில்லையெனவும், அதன் காரணமாக வெளிநாடு செல்வதற்கு பொருத்தமில்லாத பணியாளர்கள் வெளிநாடு சென்று தொழில் நிலையங்களில் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொள்ளல் உடல்/உள துன்புறுத்தல்களுக்கு உட்படுதல், சம்பளம் கிடைக்காமை குழந்தைகளைப் பற்றி எந்நேரமும் நினைப்பதால் உளவியல் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேர்கின்றமை. வேலைக்கு பொருத்தமற்ற பெண்கள் மற்றும் வெவ்வேறு சிகிச்சைகளை மேற்கொண்டவர்கள் வெளிநாடு செல்லல் வெளிநாடு சென்றதன் பின்னர் கருத்தரித்தாக தெரிய வருதல் அத்துடன் மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தாமல் வெளிநாடு செல்லல் போன்ற காரணங்களின் அடிப்படையில் வெளிநாடு சென்று மிகவும் குறைந்த காலப்பகுதியில் நாட்டிற்கு வருதல் போன்ற சந்தர்ப்பங்கள் இருந்தமை, இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்டன.

**மதிப்பீடு**

i. வெளிநாடு செல்வதற்குத் தகைமையுடைய நபர்கள் மாத்திரம் வெளிநாடு செல்வதற்கு திட்டமிடல் மற்றும் அவ்வாறு இல்லாவிட்டால் உரிய பணியாளர்களுக்கு வெவ்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படல் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு அது தொடர்பாக தலையீடு செய்ய வேண்டி ஏற்படல்.

ii. முறையான உடல் தகைமை இல்லாமல் அல்லது விஷேடமாக கர்ப்பினி நிலைமையை இனங்காணப்படாத பெண்கள் வெளிநாடு சென்றதன் பின்னர் அவர்கள் சேவைக்கு பொருத்தமற்ற நிலைமைக்கு உட்படுவதால் மீண்டும் இலங்கைக்கு வரவேண்டியேற்படல் மற்றும் அந்த பிரச்சினைகளுக்கு மத்தியில் சேவை புரிவதற்கு நேர்தல் அல்லது சேவை நிலையங்களிலிருந்து அவர்கள் வெளியேற்றப்பட்ட சந்தர்ப்பங்களில் தடுப்பு வீடுகளில் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்வதற்கு நேருதல்

**பரிந்துரைகள்**

i. வெளிநாடு செல்வதற்கு தகைமை உள்ள நபர்களை பயிற்சிக் காலப்பகுதியில் இனங்காணாமை.

ii. வெளிநாடு செல்வதற்கு பொருத்தமற்ற தொழிலாளர்களை உரிய காலப்பகுதிக்குள் வெளிநாடு செல்வதற்கு முடியாத வகையில் அவர்களை கருப்பு பதிவேட்டிற்கு உட்படுத்தி அவற்றை நாளது வரையாக்கல்.

**பணியகத்தின் கருத்துரை (பரிந்துரைக்காக)**

உடல், உள தகைமைகளை இனங்காண்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் மிகவும் கவனமான மேற்பார்வையுடன் செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் பொருத்தமற்ற நபர்கள் இனங்காணப்பட்டு கருப்பு பட்டியலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அது தொடர்ந்தும் கண்டிப்பாக பேணப்படுகின்றது.

**3.1.2 குடிபெயரும் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்**

(அ) வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக வருடாந்தம் வெளிநாடு செல்லும் இலங்கையரிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் வெவ்வேறு தன்மையுடையதாக இருந்ததுடன் 2011 முதல் 2014 வரையான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| முறைப்பாடுகளின் தன்மை | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|
| இனங்கிய சம்பளம் செலுத்தாமை | 1963 | 1804 | 2012 |
| தொடர்பாடல் பலவீனம் | 1031 | 1108 | 1334 |
| சுகயீனம் | 1469 | 1611 | 1557 |
| துன்புறுத்தல் (உடல் மற்றும் பாலியல்) | 1520 | 1526 | 1763 |
| மரணம் | 302 | 287 | 298 |
| உடன்படிக்கை காலம் முடிவடைந்தும் மீண்டும் இலங்கைக்கு அனுப்பாமை | 983 | 1031 | 762 |
| இலங்கையில் தமது வீடுகளில் காணப்படும் பிரச்சினைகள் | 82 | 74 | 94 |
| சேவை உடன்படிக்கைகளை மீறல் | 1602 | 1582 | 2059 |
| உரிய காலத்திற்கு முன் சேவையை முடிவுறுத்தல் | 107 | 232 | 277 |
| வேலையில்லாமல் திண்டாடுதல் | 57 | 59 | 239 |
| ஏனைய | 820 | 907 | 1027 |
| | 9936 | 10221 | 11422 |

இம் முறைப்பாடுகளின் எண்ணிக்கை வருடாந்தம் வேலைக்காக செல்லும் பணியாளர்கள் அளவுடன் ஒப்பிடும் போது எண்ணிக்கை ரீதியாக மிகவும் குறைந்த பெறுமதியாக அவதானிக்கப்பட்ட போதிலும், இதில் ஒவ்வொரு முறைப்பாட்டின் பின்னணியிலும் ஏதேனும் குடும்பமொன்று / நபரொருவர் அல்லது தனிநபர் குழுக்களுடன் ஒட்டிய உயிரொன்று காணப்படுகின்றது. இவ்வாறான சில பிரச்சினைகள் வாழ்க்கையொன்று / பல உயிர்கள் இல்லாமல் போகும் தன்மை வரையிலான சிக்கலான ஒன்றாக இருக்குமென அவதானிக்கப்பட்டது.

வெளிநாட்டு தொழில்வாய்ப்பு இலங்கைக்கு அந்நியச் செலாவணியை வழங்கும் பிரதான மூலமொன்றாக இருப்பதுடன் இதற்கிடையே பெண்கள் வீட்டுப்பணிப் பெண்களாக கூடியளவு பங்களிப்பொன்றை வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும் வீட்டுப் பணிப்பெண்களாக சேவை புரியும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிகரித்துள்ளதால் தேசிய

பொருளாதாரத்திற்கு அவர்களால் வழங்கப்படுகின்ற பங்களிப்பினை கருத்திற் கொண்டு வீட்டு வேலைக்காக பணியாளர்களை தொடர்புபடுத்தும் போது கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பிரச்சினைகளை முறையாக தீர்வு செய்தல்**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள், கணனி முறைமையொன்று ஊடாக உத்தியோகத்தர்களுக்கு தொடர்புபடுத்தப்பட்டு உரிய இடம்பெயர் பணியாளர்களுக்கு சலுகை வழங்குவதற்கான முறைமையொன்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், அதன் ஊடாக அத் தொழிலாளர் தொடர்பாக எழக்கூடிய சில பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்வு செய்வதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(இ) பிரச்சினைகளுக்காக போதியளவு தீர்வு வழங்கப்படாமை**

வெளிநாடு சென்ற பணியாளர்களுக்குரிய வெவ்வேறு வகையிலான பிரச்சினைகளுக்கு தீர்வுகளை எதிர்பார்த்து இடம்பெயர் பணியாளர்களினதும் அவர்களின் உறவினர்களாலும் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகளுக்காக தீர்வு காணும் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) முறைப்பாடுகளை தீர்வு செய்வதற்காக காலமொன்று எடுத்தல்

(ii) முறைப்பாடுகளுக்கு உரிய முறையில் தீர்வுகள் வழங்கப்படாமை

(iii) முறைப்பாடுகளுக்காக உள்நாட்டு தொழில் முகவர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு வருகை தருமாறு அறிவிக்கப்படும் திகதிகளில் அவர்கள் வராதிருந்த காரணத்தினால் தொலைவிலிருந்து வருகை தரும் இடம்பெயர் பணியாளர்களின் உறவினர்களுக்கு மீண்டும் மீண்டும் பணியகத்திற்கு வருகை தர வேண்டி ஏற்படுதல்.

(ஈ) முறைப்பாடொன்று கிடைத்தவுடனே கோவையொன்றை திறந்து முறைப்பாடுகளை தீர்வு செய்து கோவையை மூடும் வரையான செயற்பாடுகளுக்குரிய வழிகாட்டிகள் காணப்பட்ட போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் கோவையை மூடிவிடுதல் போன்ற சந்தர்ப்பங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

- வெளிநாடு சென்ற தொழிலாளர்களுக்கு வழங்கும் தீர்வுகள் தெளிவாக கோவையில் குறிப்பிடாமை.
- வெளிநாடு சென்ற பணியாளர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக குறிப்பிடப்பட்டு கோவை மூடப்பட்டிருந்த போதிலும் அதனை உறுதிப்படுத்த தேவையான சான்றுகள் காணப்படாமை.
- இழப்பீடு வழங்கப்பட வேண்டிய இடம்பெயர் பணியாளர்களின் நலன்புரி பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டமைக்கான எழுத்து மூல சான்றுகள் காணப்படாமை.

**மதிப்பீடு**

வெளிநாடு செல்லும் பணியாளர்களுக்காக கிடைக்க வேண்டிய சேவைகள் முறைப்படி கிடைக்காத காரணத்தினால் பாதிப்பிற்கு உள்ளாகும் தரப்பினருக்கு உரிய நிவாரணங்கள் கிடைக்காமை.

பரிந்துரை

i. குறுகிய காலத்தில் முறைப்பாடுகளை தீர்வு செய்தல்
ii முறைப்பாடுகளை தீர்ப்பதற்கு உள்ள திகதிகளில் இரு தரப்பினரும் அதற்கு சமூகமளித்தல்.
iii. முறைப்பாடு கிடைத்த சந்தர்ப்பத்திலிருந்து அதற்கு உரிய தீர்வொன்றை வழங்கும் வரையான செயற்பாடுகளை உள்ளடக்கூடிய வகையில் முறைப்பாட்டு கோவைகளை முறையாக பேணுதல்
iv. தொலைவிலிருந்து வருகை தருவோரின் தொழில் முகவர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து முறைப்பாட்டை தீர்வு செய்வதற்காக அவர்களை கொழும்பிற்கு அழைத்து வருவதற்குப் பதிலாக தொழில் வாய்ப்பு முகவர்களின் பிரதேச அலுவலகங்களுக்கு அழைத்து வருதல்.
v. கோவைகளின் தற்போதைய நிலைமை தொடர்பாக மீளாய்வு செய்தல்.
vi. போதியளவு கண்காணிப்பு வேலை நடைமுறையொன்றை செயற்படுத்துதல்.

**பணியகத்தின் கருத்துரை**
**(3.1.2.(அ) பந்திக்காக)**
“2011, 2012, மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்குரிய முறைப்பாடுகள் தொடர்பாக பார்க்கும் போது இதுவரை (2015) முறைப்பாடுகளில் 98 சதவீதத்திற்கு மாத்திரம் தீர்வு வழங்குவதற்கு முடியுமாக இருந்தது.”

**(3.1.2.(ஆ) பந்திக்காக)**
“பிரச்சினைகளை முறையாக தீர்வு செய்வதற்காக மத்தியஸ்த உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலமும் கணனி முறைமையூடாகவும் முகாமையாளர்களால் எப்போதும் மத்தியஸ்த உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றது. அவ்வாறே இணக்கப்படுத்தல் பிரிவின் செயற்பாட்டுக் கைநூலை ஆய்வு செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.”

**(3.1.2.(இ) பந்திக்காக)**

i. இணக்கப்பாட்டுப் பிரிவிற்கு கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளின் தன்மை ஒன்றுக்கொன்று வேறுபடுவதுடன் பிரச்சினையின் தன்மை பிரகாரம் அந்த பிரச்சினையை தீர்வு செய்வதற்கு எடுக்கும் காலம் ஒன்றுக்கொன்று வேறுபடக்கூடிய தன்மையில் காணப்படுகின்றது.

ii. “மத்தியஸ்த பிரிவினால் எப்போதும் முறைப்பாட்டாளர் முறைப்பாட்டில் வேண்டப்படும் கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் முடியுமான அளவில் மேற்கொள்ளப்படுகின்றது.

iii. “முதலாவது முறையின் போது உள்நாட்டு முகவர் வருகைதராமை அடிப்படையில் இரண்டாவது முறையும் பரிசீலனைக்காக அழைக்கப்படுவர். அம்முறைப்பாடுகளை பரீட்சிப்பதற்கு உள்நாட்டு தொழில் முகவர்கள் வராவிட்டால் அந்நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடருவதற்காக கோவைகள் சட்டப்பிரிவிற்கு அனுப்பிவைக்கப்படுகின்றது.”

iv. “மத்தியஸ்த உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் போதும் வசதிகள் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உங்களால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அடிக்கடி அறிவூட்டல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.”

**(பரிந்துரைக்காக)**

''உங்களால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் மத்தியஸ்த பிரிவின் செயற்பாட்டுக் கைநூல் மூலமும் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மத்தியஸ்த உத்தியோகத்தர்களுக்கு அக்கைநூலை எந்நேரமும் ஆய்வு செய்து வேலைக்கான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் எப்போதும் உத்தியோகத்தர்கள் பயிற்சி பாடநெறிகளுக்கு தொடர்புபடுத்தப்பட்டு மத்தியஸ்த உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளை உயர் மட்டத்தில் பராமரிப்பதற்கு முடியுமான வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

### 3.2 பெண்கள் வெளிநாடு செல்வதின் விளைவுகள்

பெண்கள் வெளிநாடு செல்வதால் ஏற்படும் பாதகமான விளைவுகள் இலக்கங்களினால் அளவிட முடியாமல் இருப்பதுடன் இலங்கை போன்ற தென் ஆசியாவில் தாயைமையமாகக் கொண்ட குடும்ப போக்கில் தாய் தூரமாகுதல் பிள்ளைகளுக்கு பாதகமாக தாக்கமளிக்கின்றமை பின்வரும் விடயங்களின் மூலம் புலனாகின்றது.

### 3.2.1 சிறுபிள்ளைகள் இருக்கும் தாய்மார் வெளிநாடு செல்லல்

03 வயதுக்கு குறைந்த பிள்ளைகள் இருக்கும் தாய்மார் வெளிநாடு செல்வதை தடுப்பதற்கும் அவ்வாறு சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டதன் பின்னர் அவர்கள் கறுப்பு பட்டியலுக்கு உட்படுத்தப்படுவதாக பயிற்சி பிரிவிற்கு வழங்கப்பட்ட 02/2012 மற்றும் 2012 செப்தம்பர் 12 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்தகவல்களை வெளிப்படுத்தாமல் எந்த வகையிலேனும் பெண்கள் வெளிநாடு சென்றிருந்த 9 சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

இவ்வாறான தாய்மார்கள் வெளிநாடு சென்று சேவை புரியும் போது எப்போதும் பிள்ளைகள் தொடர்பாக ஞாபகத்திற்கு வருதல், அடிக்கடி தொலைபேசியூடாக அவர்களுடன் கதைத்தல், பிள்ளைகள் நோய்களுக்கு உட்படுவது தொடர்பாக செய்திகள் கிடைத்தல் போன்ற விடயங்களினால் வேலை செய்யுமிடத்தில் எப்போதும் பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொண்டு குறுகிய காலத்தில் இலங்கைக்கு வருவதற்கு முயற்சி எடுக்கும் சந்தர்ப்பங்களும் அவ்வாறான பிள்ளைகள் இந்நாட்டில் பாதுகாப்பற்றும் அவர்களின் எதிர்காலம் இருளடைவது தொடர்பான சிக்கல்களும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

அவ்வாறே சிறு பிள்ளைகள் இருக்கும் தாய்மார் வெளிநாடு செல்வதனால் பிள்ளைகளின் நல்ல நிலைமைக்கும் ஆளுமைக்கும் பாதகமான தாக்கமொன்று ஏற்படுத்துவதுடன் தாயின் அன்பு குறைவடைதல் பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சி குறைவடைந்து தாழ்வுச் சிக்கல் போன்றவை ஏற்படுதல் பிற்காலத்தில் மனஅழுத்தம் தாங்கும் நிலைமையை ஏற்கும் சக்தியை இல்லாமல் போகுமென்பது சமுதாய விஷேட நிபுணர்களின் கருத்தாகும்.

சிறு காலப்பகுதி முதல் ஆரம்ப மற்றும் இரண்டாம் கல்வியை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு தாயின் அரவணைப்பு எப்போது தாக்கமளிப்பதுடன் அவ்வாறான கவனமொன்று இல்லாமையால் பிள்ளைகள் பொடுபோக்காக செயற்படல் உட்பட குடும்பச் சூழலில் கல்விக்குச் சாதகமான சூழலொன்று இல்லாமையால் எதிர்காலத்தில் நாட்டிற்குத் தேவையான ஒழுக்கமுடைய தரப்பினரை உருவாக்குவதில் பாதகமான தாக்கமொன்றை ஏற்படுத்தும்.

### 3.2.2 எச்.ஐ.வி (HIV/AIDS) செயற்திட்டம்

மத்திய கிழக்கு நாடுகளில் சேவையில் ஈடுபட்டிருக்கும் போது பிரச்சினை ஏற்பட்ட மற்றும் நோயாளியாகிய பணியாளர்கள் கட்டுநாயக்காவில் அமைந்துள்ள ''சஹன பியச'' நிலையத்தின் ஊடாக மீண்டும் இலங்கைக்கு வருகை தந்திருந்த சந்தர்ப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது எயிட்ஸ் போன்ற நோய்கள் ஏற்படுமென அறியப்பட்டதன் பின்னர் குறித்த பணியாளர்களை மீண்டும் இலங்கைக்கு

அனுப்புவதற்கு அந்நாடுகள் நடவடிக்கை எடுப்பது அவதானிக்கப்பட்டது. அந் நோயாளர்களில் கூடுதலானோர் மேலதிக சிகிச்சைக்காகவும் நோய் பரவுவதை தடுப்பதற்காகவும் அறிவுரைகளை வழங்கும் பொருட்டு உரிய வைத்தியசாலைகளுக்கு அவர்களை அனுப்பாதிருந்தமையால் அந்நோய்கள் பரவுவதற்குரிய சந்தர்ப்பங்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

அவ்வாறே இலங்கையில் ஆண்டு தோறும் அதிகரித்து வரும் H.I.V வைரஸ் தொற்றிய நபர்களில் 80 சதவீதம் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வரும் பெண்களிடையே காணப்படுவதாக பாலியல்சார் நோய்கள் மற்றும் எய்ட்ஸ் ஒழிப்பு துறையின் பணிப்பாளர் கருத்துரைந்திருந்தார். இந்நிலைமை இப்பெண்கள் இரண்டாவது தடவை வெளிநாடு செல்லும் போது நடாத்தப்படும் மருத்துவ பரிசோதனைகளின் போதே வெளிப்படுத்தப்படுகின்றது.

அதன் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை பின்வருமாறு.

| விபரம் | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|
| அறிக்கையிட்ட மொத்த எய்ட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை | 121 | 144 | 182 | 196 |
| 80 சதவீத மத்திய கிழக்கிலிருந்து எய்ட்ஸ் தொற்று நோய் தொற்றிற்கு உட்பட்ட பெண் பணியாளர் எண்ணிக்கை | 97 | 115 | 146 | 157 |

(மூலம் 2014 பெப்ரவரி 02 ஆந் திகதி மவ்பிம பத்திரிகை)

**மதிப்பீடு**

i. வீட்டுப்பணிப்பெண்களாக சேவை புரியும் போது அடிக்கடி தமது பிள்ளைகள் தொடர்பாக நினைவிற்கு வருவதால் தமது வேலைகளை முறையாக நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததாலும் அதனால் சேவை புரியும் வீட்டில் எஜமான் உட்பட வீட்டுடமையாளர்களால் இன்னல்களுக்குட்படுத்தப்படல்

ii. சிறு பிள்ளைகள் இருக்கும் தாய்மார் வெளிநாடு செல்வதால் தமது குழந்தைகளுக்கு உரிய பாதுகாப்பு கிடைக்காமையால் ஏற்படும் பாதகமான தாக்கம்

iii. இலங்கையில் பாலியல் தொடர்பான நோய்கள் பரவும் வாய்ப்பு இருப்பதாலும் அதன் மூலம் பாரிய சமூகச் சிக்கல்கள் உருவாகுதல்.

**பரிந்துரை**

i. பெண்கள் வெளிநாடு செல்வதைக் குறைத்து முடியுமானளவு ஆண்களை வெளிநாட்டிற்கு அனுப்ப முயற்சித்தல்.

ii. வெளிநாடு செல்லும் பெண்கள் தொடர்பான குடும்ப பின்னணி அறிக்கை கிராம சேவையாளர் மூலம் சரியாகப் பெற்றுக் கொள்ளப்பட்டு சிறு பிள்ளைகள் இருப்பது தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

iii. பயிற்சி நிகழ்ச்சியின் போது பாலியல் ரீதியான நோய்கள் தொடர்பாக தற்போது இணங்கும் வகையில் விரிவான பிரச்சாரமொன்றை வழங்குதல்.

iv. வெளிநாடு செல்ல முன்னரும் பின்னரும் பாலியல் ரீதியான நோய்கள் உடம்பில் தொற்றியுள்ளதா என பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

v. எயிட்ஸ் போன்ற நோய் நிலைமைக்குள்ளாகி நாட்டிற்குள் வரும் பணியாளர்களை இனங்காணுதல், அவர்களை சிகிச்சைக்காக தொடர்புபடுத்துதல் மற்றும் சமூகமயமாக்கலை முறையாக இடம் பெறும் வேலைத் திட்டமொன்றூடாக சுகாதார அமைச்சுடன் இணைந்து ஆரம்பித்தல்.

**பணியகத்தின் கருத்துரை**
**(3.2.2 ஆம் பந்திற்குரியது)**

வெளிநாடு செல்லும் தொழிலாளர்களுக்காக சுகாதாரக் கல்வி தொடர்பான பயிற்சியாளரின் ஊடாக தொற்று, சுகாதார, பாலியல் நோய்கள், HIV / AIDS போன்ற நோய்கள் (NCDS) தொடர்பான தேவையான அறிவு தெளிவு, மற்றும் எண்ணங்களை உருவாக்குவதற்காக மற்றும் அறிவூட்டுவதற்காக 03 மணித்தியாலங்கள் எளிய மொழிப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக வெளிநாட்டு தொழில் வாய்ப்பின் போது முகங்கொடுக்கக் கூடிய பாலியல் சவால்களை இனங்காணல் மற்றும் அவற்றுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க கூடிய முறை தொடர்பாக கலந்துரையாடலொன்றை பயிற்சி முடிவடைவதற்கு முன்னரான தினத்தின் மாலை வேலையில் பயிற்சியாளர்களுக்காக நடாத்தப்படுகின்றது.

கடந்த சில வருடங்களில் பயிற்சியாளர்களுக்கு போதியளவில் பட்டறைகள், மீள் உருவாக்க பட்டறைகள் நடாத்தப்படாமையால் 2015 ஒக்தோபர் மாதத்திலிருந்து மீண்டும் பயிற்சி பட்டறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் எதிர் காலத்தில் ஒவ்வொரு பிரிவு தொடர்பாகவும் போதியளவு கவனமொன்றுடன் மேற்கொள்ளப்படும்.

**(பரிந்துரை இலக்கம் ii,iv,v இற்குரிய)**

ii. ''தொழிலுக்காக வெளிநாடு செல்லும் பெண்களின் குடும்ப பின்னணி அறிக்கையில் உள்ளடக்கப்படும் தகவல் மற்றும் வசிப்பிடம், சிவில் நிலைமை தொடர்பாக சரியானதென கிராம சேவையாளர் மூலம் உறுதிப்படுத்திக் கொள்வதுடன், அவரின் குடும்ப பின்னணி நிலைமை தொடர்பாக வெளிக்கள உறுதிப்படுத்தலொன்றை மேற்கொள்வதன் மூலம் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் தகவல்கள் பரீட்சிக்கப்பட்டு பின்னர் பிரதேச செயலாளர் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது''

iv. ''வெளிநாடு சென்று வரும் பெண்கள் தொடர்பாக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மூலம் பின்தொடர் நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் மீள் இணைத்தல் (Reintergration) நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொள்வதன் மூலம் அவர்களை அறிவூட்டுதல் மற்றும் அந்நோய்த் தொற்றுதல் பரீட்சிக்கப்பட்டு அவர்களை உரிய நிறுவனங்களுக்கு தொடர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

v. இந்த தேசிய நிகழ்ச்சி தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சுகாதார அமைச்சு அதனுடன் இணைந்த நிகழ்ச்சித்திட்டமொன்று அமுல்படுத்துவதற்கு எதிர்காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத் திட்டங்களிலும் இதனை உள்ளடக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**3.3 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான அவதானிப்புக்கள்**
**3.3.1 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பலவகைப்படுத்தப்படாமை**

மத்திய கிழக்கு வலயத்தில் காணப்படும் தொழில் கேள்விக்கு ஏற்ற வகையில் முகங்கொடுக்கக்கூடிய பணியாளர் படையணியொன்றை அமைப்பதற்கு பொருத்தமான விடய பரிந்துரையொன்று உள்ளடங்கும் வகையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

செயற்படுத்த வேண்டிய போதிலும், செயற்படுத்தவதற்கிருந்த பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் போதியளவில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

மத்திய கிழக்கு வலயத்திற்கு செல்லும் தொழிலாளர்கள் அநேகமாக அரைப்பயிற்சி மற்றும் பயிற்சி பெறாத தொழிலாளர்களாக இருந்ததுடன் அவர்கள் செல்லும் தொழில் துறையின் பிரகாரம் பயிற்சி பாடநெறிகள் நடாத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திலிருந்து மத்திய கிழக்கு தொழிலுக்காக நடாத்தப்படும் பயிற்சி பாடநெறிகள் பிரதானமாக வீட்டுப் பணிப்பெண்களை இலக்காகக் கொண்டு நடாத்தப்படுவதுடன் ஏனைய தொழிலுக்காக சிறு பயிற்சிகள் நடாத்தப்படுகின்றன.

| **பாடநெறி** | **காலப்பகுதி** |
|---|---|
| | **நாட்கள்** |
| தேசிய தொழில்சார் பயிற்சி சான்றிதழுக்குரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| மத்திய கிழக்கு வீட்டுப்பணிப்பெண் - சிங்களம் | 21 |
| மத்திய கிழக்கு வீட்டுப் பணிப்பெண் - தமிழ் | 21 |
| தேசிய தொழில்சார் பயிற்சி சான்றிதழுக்குரியதல்லாத பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| மத்திய கிழக்கு வீட்டுப் பணிப்பெண் (அனுபவமுள்ள) - சிங்களம் | 07 |
| மத்திய கிழக்கு வீட்டுப் பணிப் பெண் (அனுபவமுள்ள) - தமிழ் | 07 |
| சாக்ராதா – சிங்களம் | 18 |
| சாக்ராதா – தமிழ் | 18 |
| மத்திய கிழக்கு வீட்டுப்பணிப்பெண் அல்லாத - சிங்களம் | 05 |
| மத்திய கிழக்கு வீட்டுப் பணிப்பெண் அல்லாத - தமிழ் | 05 |

கடந்த ஆண்டுகளில் ஒவ்வொரு தொழில் வகையின் கீழ் வெளிநாடு செல்வதைப் பரீட்சித்த போது வீட்டுப் பணிப்பெண்களுக்கு மேலதிகமாக அரைப் பயிற்சி மற்றும் பயிற்சியற்ற வகைகளின் கீழ் கூடுதலானோர் வெளிநாடு சென்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. உதாரணமாக சுத்திகரித்தல், மேஸ்திரி, வேல்டர், சாரதி போன்ற பதவியணிகளுக்காக வெளியேறிச் செல்லும் அந்தந்த துறைகளின் கீழ் பயிற்சியொன்று வழங்கப்பட வேண்டும். சாரதிப் பதவிகளுக்காக வெளியேறிச் செல்லும் பணியாளர்கள் அந்தந்த நாடுகளில் சாரதிப் பரிசோதனைக்கு தோற்றுதல் கட்டாயமாக இருப்பதுடன் அப்பரீட்சையில் சித்தியடையாமல் இருந்தால் பணம் செலுத்தி இலங்கைக்கு வரவேண்டி ஏற்படும்.

### 3.3.2 மத்திய கிழக்கு தொழிலுக்கான உரித்தான சட்டரீதியான சூழல் தொடர்பான அறிவு

மத்திய கிழக்கு நாடுகளில் வேலைக்காக வெளியேறும் தொழிலாளர் முகங்கொடுக்கும் சிக்கல்கள் தொடர்பாக கவனம் செலுத்தும் போது அந்த பணியாளர்களுக்கு ஒவ்வொரு நாடுகளில் அமுலாகும் சட்டரீதியான சூழல் தொடர்பான போதியளவு தெளிவொன்று இல்லாமையே வெவ்வேறு சிக்கல்கள் தோன்றுவதற்குரிய காரணங்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) மத்திய கிழக்கு நாடுகளில் சேவை புரிவதற்காக வெளியேறும் பணியாளர்களுக்கு 5 நாட்கள் முதல் 21 நாட்கள் வரையான பயிற்சி பாடநெறிகள் 2 மணித்தியாலம் வீதம் மாத்திரம் சட்ட ரீதியான அறிவொன்று வழங்கப்படுவது அவதானிக்கப்பட்டது.

(ii) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் இவ்வாறு வழங்கப்படும் சட்டரீதியான அறிவு போதியதாக இல்லையெனவும் விஷேடமாக ஷரீஆ சட்டத்தின் ஆழ்ந்த கருத்து தொடர்பாக முறையாக அறிவுறுத்தப்பட வேண்டுமென சவூதி அரேபியா, ஜோர்தான் ஆகிய நாடுகளில் 2012 சனவரி 01 ஆந் திகதி முதல் 17 ஆந் திகதி வரை ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்ட பணியகத்தின்

உத்தியோகத்தர்களுக்கு உரிய இலங்கை தூதுவர்களால் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

(iii) பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் அநேகமான தொழிலாளர்கள் அந்நாடுகளில் அமுல்ப்படுத்தப்படும் சட்டப் பின்னணி தொடர்பான போதியளவு அறிவினைக் கொண்டிராமையே காரணமென மத்திய கிழக்கு நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு சுற்றுலாக்களில் ஈடுபட்ட தூதுவர்களின் கருத்தாக இருந்தன.

### 3.3.3. செயற்பாட்டு ரீதியான பயிற்சி

இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மத்திய கிழக்கில் பணிபுரியச் செல்லும் வீட்டுப் பணிப் பெண்களுக்கு 21 நாட்கள் பயிற்சிப் பாடநெறிகள் நடாத்தப்படுவதுடன் இதில் 25 பயிலுனர்கள் பயிற்சி பெறுவதுடன் இப்பாடநெறியில் ஒவ்வொரு நாளிற்குமென நிர்ணயிக்கப்பட்ட பாடவேளைகள் மற்றும் பயிற்சி நெறிகள் என்பவற்றின் பிரகாரம் ஒருவருக்கு உரித்தாகும் செயல்முறைப் பயிற்சி சந்தர்ப்பங்கள் வரையறுக்கப்பட்டிருப்பதாகவும் செய்முறை பயிற்சி வழங்குவதற்குரிய தேவையான நவீன உபகரணங்கள் போதியளவு காணப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ii) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உத்தியோகத்தர்களின் தெளிவுபடுத்தலுக்கு அமைய முறையான தொடர்புகளுடன் பயிற்சி நிலையங்களை நிர்மாணிக்க வேண்டியதுடன் அவை தொழிநுட்பம், பயிற்சி, வைத்தியம், நிர்மாணக் கைத்தொழில், ஊடகம் மற்றும் போக்குவரத்து போன்ற துறைகளில் விஸ்தரிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 3.3.4 தனியார் பயிற்சி நிலையங்களிற்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் மேற்பார்வை

கூடுதலாக பணியாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்களையும் சேர்த்துக் கொள்வதன் மூலம் பயிற்சி வேலைத்திட்டங்களை விஸ்தரித்தல் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் ஒரு நோக்கமாகும்.

(அ) தனியார் பயிற்சி நிலையங்களின்பால் தாக்கம் செலுத்துதல்

பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இவ்வெளிநாட்டு தொழில் முகவர் நிலையங்களைத் தொடர்புபடுத்திக் கொண்டு மேலும் பணிப் பெண்களை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்காக பொருத்தமான கட்டிடங்கள், பொருட்கள், பயிற்சி உபகரணங்கள் மற்றும் போதியளவு மனித வளங்கள் மற்றும் வசதிகளை உடைய வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களை பயிற்சி நிலையங்களாக நடாத்திச் செல்வதற்காக விதந்துரைக்கப்பட்டிருந்தது. எனினும், அம்முகவர் நிலையங்களினூடாக வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெற்றுச் செல்லும் பணிப்பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இம்முகவர் நிலையங்கள் முன்வரும் நிலமை தொடர்பாகவும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் கவனம் செலுத்தவில்லை என்பது பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

i. பயிற்சி உபகரணங்கள் உரிய தரத்தில் காணப்படுகின்றதா எனக் கண்டறிவதற்கு சான்றுகள் காணப்படவில்லை.

ii. உடற் பயிற்சிகளின் போது தமது தகைமை தொடர்பாக உறுதிப்படுத்தாத, 03 வயதிற்கு குறைந்த பிள்ளைகளை உடைய தாய்மார்கள், உடற் பலவீனங்கள் உடைய அல்லது சரும நோய்களுடன் தொடர்புடைய மருக்கள், தழும்புகள், காயங்கள் போன்றவற்றை உடைய பணியாளர்கள் பயிற்சி நெறியில் இருந்து அகற்றப்பட வேண்டும் என முகாமையாளரினால் 02/2012 ஆம் இலக்க பயிற்சி சுற்றறிக்கைக்கு அமைய அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கமைய இந்நிலையம் தொழிற்படுகின்றதா என்பது தொடர்பாக இலங்கை வெளிநாட்டு

வேலை வாய்ப்புப் பணியகம் உறுதிப்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

**(ஆ) தனியார் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வெளிநாட்டிற்குச் செல்லும் பயணிகளின் பிரச்சினைகள்**

தெரிவுப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தபட்ட தனியார் மட்டத்தில் பயிற்சி வழங்கும் 02 தொழில் முகவர்கள் நிலையங்கள் தொடர்பாக கோவைகளின் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| தொழில் முகவர்கள் நிலையத்தின் அனுமதிப்பத்திர இலக்கம் | பரிசோதனைக்கு உட்பட்ட ஆண்டு | வெளிநாடு சென்றவர்களின் எண்ணிக்கை | கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 946 | 2010/2011 | 720 | 105 | 04 |
| | 2011/2012 | 628 | 100 | 03 |
| | 2012/2013 | 709 | 100 | 07 |
| 940 | 2010/2011 | 430 | 50 | 01 |

இவ் எண்ணிக்கை தரவுகளின் பிரகாரம் தனியார் தொழில் முகவர் நிறுவனங்கள் மூலம் பயிற்சியைப் பெற்று வெளிநாடு செல்லும் எண்ணிக்கை கருத்திற் கொள்ளக்கூடிய எண்ணிக்கையாக இருந்ததுடன், அவ்வாறு வெளிநாடு செல்லும் பணியாளர்களுக்குரித்தாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 10 முதல் 16 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. மேலும் ஒவ்வொரு நிறுவனங்கள் தொடர்பாக வெவ்வேறு காரணங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்த தடவைகளும் இரண்டு சந்தர்ப்பங்களில் 3 தடவைகளை மிகைத்திருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**(இ) தொழில் முகவராண்மை நிறுவனங்களின் அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல்**

இம்முகவர் நிறுவனங்களின் அனுமதிப்பத்திரங்கள், வருடாந்தம் புதுப்பிக்கும் போது மத்தியஸ்த பிரிவு, புலனாய்வுப் பிரிவு, மற்றும் சட்டப் பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு கிடைக்கப்பெற்றிருந்த முறைப்பாடுகள் தொடர்பாக பரிந்துரைகள் பெற்றுக்கொள்வதுடன் அப்போது அநேகமான மத்தியஸ்தப் பிரிவு உரிய அனுமதிப்பத்திர புதுப்பித்தலினை பரிந்துரைத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் வெளிநாடு செல்லும் ஊழியர் எண்ணிக்கைக்கு ஒப்பாக கிடைத்த முறைப்பாடுகள் எண்ணிக்கையும் அம்முறைப்பாடுகளுக்கு தலையிட்டு அவை தீர்வுசெய்யப்படும் எண்ணிக்கை தொடர்பாக திருப்தியடைய முடியாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதால் அவ்வாறான தனியார் தொழில் முகவராண்மைகள் ஊடாக வழங்கப்படும் பயிற்சி தொடர்பாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கூடுதலான கவனமொன்று செலுத்தப்பட வேண்டுமென்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(ஈ) பயிற்சி பெறுவோரின் சமூகநிலை**

பயிற்சியொன்றை பெறுவதற்கு வருகை தருவோர் எந்தவொரு பயிற்சியுமில்லாத குறைந்த கல்வி மட்டத்திலுள்ள, எவற்றையும் விளங்கிக் கொள்ளக்கூடிய இயலுமை குறைந்த மட்டத்தில் உள்ளவாறாக இருப்பதால் அவர்கள் பயிற்சியளிக்கும் பொருட்டு பின்பற்றப்படுகின்ற நடைமுறை மற்றும் வசதிகள் தொடர்பாக நேரடியாக கண்காணிப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் இப்பயிற்சியும் நடைமுறை ரீதியிலும் செயல்முறை ரீதியிலும் வழங்கப்பட வேண்டும்.

### 3.3.5 பயிற்சி செயற்பாடுகளுக்காக வளவாளர்களைத் தெரிவுசெய்தல்.

வெளிநாடு செல்தற்கு எதிர்பார்க்கின்ற பணியாளர்களைப் பயிற்சியளிக்கும் செயற்பாட்டிற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற வளவாளர்களின் குறைந்த தகைமைகளுக்கு மேலதிகமாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற வீட்டுப் பணிப்பெண் பயிற்சி பாடநெறியைப் பின்பற்றியதன் பின்னர் வீட்டுப் பணிப்பெண்ணாக 4 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமொன்று பணியகத்தில் பதிவுசெய்து தொடர்ச்சியான சேவை புரிந்திருப்பது தேவைப்பாடொன்றாகும். தெரிவு செய்யப்பட்ட இப்பயிற்சியாளர்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

i. பயிற்சி வழங்குவோர் சேவைபுரிந்துள்ள சமூக நிலைமை தொடர்பாக விரிவான அறிவினைக் கொண்டிராமை.
ii. இவ்வாறு தெரிவுசெய்யப்படுகின்ற பயிற்சியாளர்களின் சேவைக்காலம் ஆண்டுதோரும் நீடிக்கும் அடிப்படையில் தற்காலிகமாக நியமனம் செய்யப்படுவதுடன் மணித்தியால அடிப்படையில் கொடுப்பனவு வழங்கப்படுகின்றமை.
iii. இப்பயிற்சியாளர்களிடம் ஏதேனும் செயல்முறை அறிவொன்றும் மொழி அறிவொன்றும் இருந்த போதிலும், பாடத்திட்டத்தில் பின்வரும் பகுதிகளை ஈடுசெய்வதற்கு அவர்களிடம் உள்ள அறிவு போதியதாக இல்லாதிருந்தமை.

- குறித்த நாடுகளில் அமுலாகும் சட்டம்
- ஒவ்வொரு நாடுகளினதும் சமூக நிலைமை

### 3.3.6 பயிற்சி நிலையங்களை ஸ்தாபித்தலும் நிர்வாகமும்

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் பயிற்சி பாடநெறிகள் நடாத்தப்படும் நிலையங்களுக்கு இடையே தெரிவுப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட கடவத்த மற்றும் பன்னிப்பிட்டிய ஆகிய நிலையங்களில் வதிவிட பயிற்சிக்காக போதியளவு இடவசதிகள் காணப்பட்ட போதிலும் இரத்மலான பயிற்சி நிலையத்தில் வதிவிட பயிற்சிக்காக உரிய இடவசதிகள் போதியளவாக காணப்படவில்லை. அதன் காரணமாக பயிற்சி பெறுவோருக்கு பயிற்சி நிலையத்திற்கு அண்மையிலுள்ள பிரதேசங்களில் பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட தற்காலிக இடங்களில் தங்கியிருந்து பயிற்சிகளுக்கு வரவேண்டியிருந்தது. பயிற்சி செயற்பாடுகள் கண்டிப்பாக மேற்கொள்ளப்படுமானால் அப்பயிற்சி நிலையங்களுக்காக மிகவும் இடவசதிகள் உள்ள நிலையங்களையே தெரிவுசெய்ய வேண்டுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**மதிப்பீடு**

i. மத்திய கிழக்கு தொழிலுக்காக இலங்கைக்கு கிடைக்கும் தொழில்வாய்ப்பு கட்டளைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அந்த கேள்வியை பூர்த்தி செய்வதற்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படாமையால் பயிற்சிபெறாத தொழிலாளர்களாக தொழிலுக்கு சென்றமையால் வெவ்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படல்.

ii. மத்திய கிழக்கு வலயத்தின் சமூக கலாச்சார நிலைமை மற்றும் சட்டரீதியான நிலைமைகள் தொடர்பாக அவர்கள் பெற்றுக்கொண்டுள்ள அறிவு போதியளவில் இல்லாமையால் அநேகமான பணியாளர்களுக்கு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேர்நிதிருந்தது.

iii. விசேடமாக பயிற்சி பெறாத வீட்டுப் பணிப்பெண்களுக்கான பயிற்சிக் காலப்பகுதியில் செயல்முறை அனுபவத்தை பெற்றுக்கொள்ளல் போதியளவு இடம்பெறாமையால் வேலைக்குச் சென்று சேவை புரியும் வேலையில் சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படல்.

iv. தனியார் முகவர் நிறுவனங்களிலிருந்து பயிற்சிபெற்றுச் செல்லும் தொழிலாளர்கள் பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்திருந்தனர்.

v. பணம் அறவிடப்பட்டு மேற்கொள்ளப்படுகின்ற வதிவிட பயிற்சிப் பாடநெறிகளை ஒழுங்கமைக்கும் போது தங்குமிட வசதிகளை பயிற்சியாளர்களினாலேயே தேடிக்கொள்ள வேண்டியிருப்பதால் பயிற்சி பாடநெறிகளின் வெற்றிக்கு பாதகமாக தாக்கமொன்று ஏற்படுதல்.

**பரிந்துரைகள்**

i. இந்நாட்டில் மத்திய கிழக்கு தொழிலுக்காகச் செல்லும் வீட்டுப் பணிப்பெண்கள் அல்லாத பணியாளர்களை இலக்காகக் கொண்டு லேபர், மேஸ்திரி, சுத்திகரிப்பாளர் போன்ற பதவிகளுக்கும் நிர்மாண மற்றும் கைத்தொழில் துறைக்காக மத்திய கிழக்கு வலயத்திற்கே உரிய அனைத்து தொழில் துறைகளை மேவுகை செய்யப்படும் வகையில் பயிற்சி பாடநெறிகளை நடாத்துதல்.

ii. வீட்டுப் பணிப்பெண்களாக பெண்கள் வெளிநாடு செல்வதை குறைப்பதற்காக நீண்டகால தீர்வொன்றாக பாடசாலையை விட்டுச்செல்லும் மாணவர்களை இலக்காகக் கொண்டு தொழில்நுட்ப மற்றும் கைத்தொழில் துறைகளில் தொழில்களை கேந்திரமாகக் கொண்டு பயிற்சி அழிக்கப்பட்ட மற்றும் திறமையாக பயிற்சி பெற்ற பணியாளர்களை வெளிநாட்டிற்கு அனுப்புதல்.

iii. குறைந்த கல்வி மட்டத்துடன் கூடிய தொழில்களுக்கு வெளியேறிச் செல்லும் தொழிலாளர்களுக்கு மிகவும் இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூய வகையில் சட்ட நிலைமை தொடர்பாக அறிவினை வழங்க வேண்டும். இதற்காக பயிற்சியாளர்களுக்கு மேலதிகமாக வெளிவாரி மதியுரையாளர்களின் ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

iv. ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்குமான செய்முறைப் பயிற்சிக்காலத்தை அதிகரித்தலும் நவீன உபகரணங்களை அதற்காக பயனபடுத்துதல்

v. தனியார் பயிற்சி நிலையங்களை முறையான நிர்வாகமொன்றின் கீழ் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்

vi. வெளிநாடு செல்லும் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்கு தாமதப்படுத்தும் முகவர் நிறுவனங்களுக்கு பயிற்சி நிலையங்களாக செயற்பட அனுமதியை இரத்துச் செய்தல்

vii. வதிவிட பாடநெறிகளை நடாத்தும் நிலையங்களில் போதியளவு விடுதி வசதிகளையும் இடவசதிகளுடன் ஸ்தாபித்தல்

**நிறுவனத்தின் கருத்துரை**
**(3.3.1. ஆம் பந்திக்கு)**
''வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் தற்போது நடாத்தப்படுகின்ற பாடநெறிகள் இலங்கையின் எந்தவாரு பயிற்சி நிலையமொன்றினாலும் நடாத்தப்படாத பாடநெறிகளகும்.''

அப்பாடநெறிகளுக்குரிய தொழில்களுக்காக செல்வபர்களுக்கு 05 நாட்கள் பொது திறமைகள் தொடர்பான பாடநெறியொன்று நடாத்தப்படுகின்றது. எனினும் ஏனைய தொழில்களுக்காக வெளிச்செல்பவர்களுக்காக கூடுதலான பயிற்சியொன்றை வழங்குவது தொடர்பில் தற்போது தேவையான நடவடிக்கைககள் எடுக்கப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் உடனடியாக இடைவெளியை நிரப்புவதற்காக தொழில்நுட்ப உள்ளீட்டுடன் கூடிய பாடநெறிகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது''.

**(3.3.2. ஆம் பந்திக்கு)**

''மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் சட்டங்கள் தொடர்பாக மிகவும் நல்ல அறிவினை வழங்குவது இடம்பெறுகின்றது. மேலும் அதற்கு தேவையான பயிற்சி உபகரணங்களை வடிவமைப்பதற்கும் பயிற்சிபெறுபவர்களுக்கு கூடுதலான பயிற்சியொன்று வழங்குவது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.''

**(3.3.3 ஆம் பந்திக்கு)**

தேசிய தொழில்சார் நிபுணத்துவ மட்டத்திலான பாடநெறியொன்று தொழில்நுட்ப மணித்தியாலம் மற்றும் செயல்முறை மணித்தியால நியமங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது ஒதுக்கப்பட்டுள்ள காலம் அதற்கு போதுமானதாக இருந்த போதிலும், மேலும் கூடுதலான காலமொன்று வழங்கப்பட வேண்டுமென்பது பணியகத்தின் கருத்தாகும். இதற்காக தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நவீனமயப்படுத்தலுக்காக எதிர்வரும் பணிப்பாளர் சபை கூட்டத்தில் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட உள்ளது''.

**(பரிந்துரைகளுக்காக)**

i. ''தேவையான பாடநெறி வடிவமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.''

ii. ''விற்பனைப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.''

iii. ''பயிற்சி நிலையங்களுக்கான பொறுப்பு பணியக உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும் இது தொடர்பாக மேலதிக பயிற்சி, பயிற்சிக் கைநூல்கள் வழங்குவதற்கும் பயிற்சி உபகரணங்களை வடிவமைப்பதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

iv. ''ஆரம்பிக்கப்பட்டுள்ளது''

v. ''தனிப்பட்ட பயிற்சி நிலையங்களை கண்காணிக்கும் வேலைத்திட்டங்களில்''

- ''ஒவ்வொரு தனியார் பயிற்சி நிலையமும் பிரதி பொது முகாமையாளரால் எஞ்சிய 2 மாத காலப்பகுதியில் நேரடி கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படும்''
- ஒவ்வொரு நிலையத்திலும் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நிலையத்தின் உரிமையாளர்களுக்கு ஒருநாள் பயிற்சி செயலமர்வொன்று தற்போது ஓழுங்கமைக்கப்பட்டுள்ளது.
- ''CCTV கெமரா பொருத்துவதன் மூலம் பின்தொடர் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது''
- ''நிலையங்கள் கொண்டிருக்க வேண்டிய வசதிகள் தொடர்பாக சுற்றறிக்கைகள் திருத்தம் செய்யப்பட்டு அவை உயர்ந்த மட்டமொன்றில் வைக்கப்பட வேண்டும்.''

vi. ''தாமதங்கள் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கான நியதிகளைத் தயாரித்தல் முதலில் இடம்பெற வேண்டும். தாமதம் ஒப்பீட்டான விடயமொன்றாகும்.''

vii. ''ஒவ்வொரு பயிற்சி நிலையத்திற்கும் போதுமான விடுதி வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.''

## 3.4 தொடர்புடைய ஏனைய பிரிவுகள் தொடர்பான பொது அவதானிப்புக்கள்

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் மூலம் நிர்வகிக்கப்படும் ஒவ்வொரு பிரிவின் ஊடாக வழங்கப்படும் சேவைகள் மூலமும் இடம்பெயர்ந்த பணியாளர்களுக்கு வழங்கப்படும் நலன்புரி தொடர்பான பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு காணப்பட்டன.

**3.4.1 நிவாரண இல்லங்கள் நிலையத்தின் ஊடாக இடம்பெயர் பணியாளர்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற நலன்புரி வசதிகள்.**
விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) அனாதரவான பெண்களுக்காக வழங்கப்படும் சேவைகள்**

மத்திய கிழக்கில் வீட்டுப் பணிப்பெண்களாக சென்று பல்வேறு வன்முறைகளுக்கு முகங்கொடுத்து மிகவும் அனாதரவான நிலைமையில் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் இந்நாட்டிற்கு வருகை தரும் சந்தர்ப்பத்திலேயே தேவையான நிவாரணங்களை வழங்குவதற்காக இந்நிலையம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு அண்மையில் நிறுவப்பட்டுள்ளது. பெண்கள் வெளிநாடு சென்றதன் பின்னர் கர்ப்பிணி நிலைமைக்குட்படல், பிள்ளை பிறந்தவுடன் மீண்டும் இலங்கைக்கு வருகை தந்திருந்த சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டிருந்தமையால் அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது தேவையான அடிப்படை நிவாரண செயற்பாடுகளை வழங்குதல் இந்நிலையத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|
| கர்ப்பிணி என்ற பேரில் மீள வந்தோர் | 30 | 47 | 39 |
| பிள்ளைகளுடன் வருகை தரல் | 33 | 46 | 27 |
| | 63 | 93 | 66 |

**(ஆ) இப்பெண்கள் தொடர்புபடுத்தப்படும் வெளியேறும் படை நிலையம்**
இப்பெண்களில் பலர் தமது உறவினர்களிடமோ அல்லது தமது வீட்டிற்கோ செல்வதை விரும்பாமையால் நிவாரண இல்ல நிலையத்தினால் அவர்களை வெளிச்செல்லும் படை தலைமையகத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் காணப்படுவதுடன், அவ்வாறான ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 1,500 வீதம் தங்கியிருக்கும் காலத்திற்காக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) பிள்ளைகளைத் தத்துக்கொடுத்தல்**

இந்தப் பெண்கள் ஒப்படைக்கப்படுகின்ற படை தலைமையகத்திற்குச் சென்று அங்கு தங்கியுள்ள தாய்மார்களிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் மேற்கொண்ட கணக்காய்வு பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் பிள்ளைகளை தத்துக்கொடுத்தல் (பிள்ளைகளை வளர்ப்பதற்கு) நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தின், திணைக்கள பிள்ளைகளைத் தத்துக்கொடுத்தல் செயற்பாடுகளின் பிரகாரம் இடம்பெறவில்லையென அவதானிக்கப்பட்டது. இதனால் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ பிள்ளைகள் தவறான நபர்களுக்கு கையளிக்க கூடிய ஆபத்தொன்று இருப்பதாகவும் அது தொடர்பாக இலங்கையில் அமுலிலிருக்கும் சட்டத்தின் பிரகாரம் உரிய அரச நிறுவனங்களின் போதியளவு மற்றும் முறையான மேற்பார்வையின் கீழ் இடம்பெற வேண்டியிருந்ததுடன், விசேடமாக நன்னடத்தை உத்தியோகத்தர்களின் கண்காணிப்பின் கீழ் இச்செயற்பாடு நடைபெற வேண்டும்.

**மதிப்பீடு**

இலங்கைக்கு வருகை தரும் சந்தர்ப்பங்களில் அநாதரவான நிலைமைக்கு உட்படும் பெண்களை இனங்கண்டு அவர்களுக்கு உதவுவது என்ற அடிப்படை செயற்பணி இந்நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற போதிலும், பிள்ளைகளை தத்துக்கொடுத்தல் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையொன்றின் பிரகாரம் இடம்பெறாமையும் அப்பிள்ளைகள் அநாதரவான நிலைமைக்குட்பட இடமிருந்தமை.

**பரிந்துரை**

பிள்ளைகளை தத்துக்கொடுத்தல் காணப்படும் சட்ட ஏற்பாடுகளின் கீழ் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் ஒட்டுமொத்த கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளலும் 1941 இன் 24 ஆம் இலக்க பிள்ளைகளை வளர்க்கும் அதிகாரச்சட்டம் நிகழ்காலத்திற்கு பொருத்தமான வகையில் மாற்றுதலும்.

**பணியகத்தின் கருத்துரை**

**பரிந்துரை (3.4.1(இ) பந்தி)**

உள்நாட்டு ரீதியில் பிள்ளைகளைத் தத்துக் கொடுப்பதற்குரிய 1941 இன் 24 ஆம் இலக்க பிள்ளைகளை வளர்க்கும் அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் தத்தெடுப்பதற்காக மாவட்ட நீதிமன்றமொன்றில் வழக்கொன்றை தொடுத்து உரிய சட்ட விதிகளைப் பூர்த்தி செய்திருந்தால் பிள்ளையைத் தத்தெடுக்க முடியும்.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் ஒட்டுமொத்த கண்காணிப்பின் கீழ் பிள்ளைகளை வளர்க்கும் அதிகாரச்சட்டத்தினை திருத்தம் செய்வதன் மூலம் பிள்ளைகளை தத்துக்கொடுக்க முடியும்.

### 3.4.2 கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் செயற்படுத்தும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அமைந்துள்ள அலுவலகத்தினால் ஆட்களை வெளிநாடு செல்வதற்கு முன்னர் பதிவினை உறுதிப்படுத்துவதற்கும் பதிவு செய்யாமலும் வெளிநாடு செல்லும் தொழிலாளர்களை பதிவுசெய்யும் செயற்பாடுகள் பின்பற்றப்படுவதாக அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக செய்யப்பட்ட நிலையப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

i. இக்காரியாலயத்தில் இட வசதிகள் குறைந்த அளவிலேயே காணப்பட்டன.

ii. வெளிநாடு செல்லும் நபர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இப்பரிசோதனை நடைபெறும் போது அதிக பயணிகள் நெரிசல் காணப்பட்டமையினால் பயணிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் சிரமங்கள் ஏற்பட்டன.

iii. முற்பதிவு இன்றி நெருக்கமானவர்கள் அல்லது உறவினர் மூலமாக வெளிநாட்டிற்குச் செல்லும் பயணிகளிற்கு உரிய பதிவுகளை அச்சந்தர்ப்பத்திலேயே மேற்கொள்ளுமாறு அறிவுறுத்திய போது அவர்களிடம் உள்நாட்டுப் பண நோட்டுக்கள் இல்லாத காரணத்தினால் சிரமங்கள் ஏற்பட்டன.

iv. விமான நிலைய வளாகத்தில் அமைந்துள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகக் காரியாலயம் மற்றும் நலன்புரி சேவை நிலையங்கள் ஆகியவற்றில் காணப்படும் பதவியணி வெற்றிடங்கள் காரணமாக அந்நிறுவனங்களிற்குப் பெற்றுக்கொடுக்க வேண்டிய உச்ச பதவியணியினரை பெற்றுக் கொடுக்க முடியாதிருந்தது. வெற்றிடங்கள் தொடர்பான விடயங்கள் பின்வருமாறு,

**பதவி வெற்றிடங்கள்**

| பதவியணி | விமான நிலைய காரியாலயம் | நலன்புரி சேவை நிலையம் |
|---|---|---|
| பிரதி முகாமையாளர்(MV) | 02 | 01 |
| பெண் உத்தியோகத்தர்கள் (SI-SIV) | 04 | 02 |
| காரியாலய உதவியாளர் (SVI) | 02 | 01 |
| அரபு மொழி மொழிபெயர்பாளர்கள் | 02 | - |

**மதிப்பீடு**

i. பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்பட்டமையால் வெளிநாடு செல்லும் பணியாளர்களுக்கு தேவையான சேவைகள் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் கிடைக்காமை
ii. பணியாளர்களின் பதிவினைப் பரீட்சித்தல் மற்றும் பதிவுசெய்துகொள்ளும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது அவ்விடத்தில் காணப்பட வேண்டிய இடவசதிகள் போதியளவில் இன்மையால் உத்தியோகத்தர்களுக்கும் பணியாளர்களுக்கும் உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு சிரமமாக இருந்தமை

**பரிந்துரை**

i. ஊழியர் வெற்றிடங்களை நிரப்புதல்
ii. விமான நிலையத்தில் அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினை இடவசதியுள்ள இடமொன்றில் ஸ்தாபித்தல்.

**பணியகத்தின் கருத்துரை**
பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 தரவு மற்றும் தகவல்களை பராமரித்தல்**

இத்துறைக்குரிய சரியான தரவுகள் மற்றும் தகவல் முறையொன்று பேணிச்செல்லல் அத்தியவசியமாக இருந்ததுடன் அவற்றை நாளதுவரையாக்குவதன் மூலம் தேவையான தீர்மானமொன்றை எடுக்கும் போது பின்புலமொன்று கிடைக்கின்றது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**3.5.1 பிரதான தகவல் முறைமை**

பணியகத்தினை ஸ்தாபிப்பதற்குரிய 1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் இலங்கைக்கு வெளியே தொழிலுக்காக இலங்கையர் வெளிச்செல்லல் மற்றும் தொழிலை முடித்துக் கொண்டு திரும்பி நாட்டிற்கு வருகை தருவதை கணிப்பீடு செய்வதற்காக தரவு வங்கியொன்றைத் ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பவற்றிற்காக நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக இலங்கை பணியாளர்கள் நாட்டிலிருந்து வெளியேறுதல் மற்றும் மீள நாட்டுக்கு வருதல் தொடர்பான தகவல்களை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும் தகவல்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். அதற்கு இணையாக பணியகத்திடம் நாளதுவரையாக்கப்பட்ட தகவல் முறைமையொன்று இல்லாதிருந்தமையால் வெளிநிறுவனங்களின் தகவல் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு நேர்ந்துள்ளமையால் குறித்த சிக்கல்களை தீர்வு செய்யும் போது பிரச்சினைகளுக்கு துரித தீர்விற்கு வருவதற்கு முடியாதிருந்தமை மற்றும் அவற்றை தீர்வு செய்வதற்கு நீண்ட காலமொன்று எடுப்பதாக அவதானிக்கப்பட்டது.

### 3.5.2 காப்புறுதி நட்டஈடு தொடர்பாக தரவுகளை பேணுதல்

இடம்பெயர் பணியாளர்களின் காப்புறுதி வேண்டுகோள் தொடர்பாக தகவல்கள் தரவு முறைமையொன்று ஊடாக பராமரிக்கப்பட்டு வருவதுடன் காப்புறுதி நிறுவனத்தினால் அந்த இழப்பீட்டு வேண்டுகோளுக்காக வழங்கப்படும் பணம், வழங்கப்பட்ட திகதி போன்ற விபரங்களை தரவு முறைமைக்கு உள்ளடக்கும் நடைமுறையொன்று இல்லாதிருந்தமையால் காப்புறுதி நட்டஈட்டு கோரல்களுக்குரிய அடிப்படையானதும் முக்கியமானதுமான தகவல்களை தரவு முறைமையொன்று ஊடாக பெற்றுக்கொள்ள முடியாமை காரணமாக இடம்பெயர் பணியாளர்களுக்கு தமது காப்புறுதி இழப்பீடு தொடர்பான முழுமையான தகவல்களை தரவு முறைமை ஊடாக பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது.

### 3.5.3 பாதுகாப்பு இல்லங்கள் தொடர்பான தகவல்கள்

பாதுகாப்பு தடுப்பு முகாம்களில் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட திகதியொன்றில் தங்கியிருக்கின்ற தொழிலாளர்களின் உள்ளவாறான எண்ணிக்கை தொடர்பான விபரங்களை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தகவல்கள் தொழில்நுட்ப பிரிவின் மூலம் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. தகவல் தொழில்நுட்ப பிரிவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற தகவல்கள் நாளதுவரையாக பேணப்படாமையே அதற்கு காரணமாக இருந்தது. எடுத்துக்காட்டாக 2012 திசெம்பர் 31 ஆந் திகதி கட்டாரில் தடுப்பு வீடுகளில் இருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 967 ஆக இருந்ததாக கணனி தரவு முறைமையிலிருந்து பெற்றுக்கொண்ட போதிலும், அதில் உட்படுத்தப்பட்டிருந்த 04 பெயர்கள் பின்னர் மாற்றப்பட்டிருந்தது. மேலும் ரியாத்தில் தடுப்பு வீடுகளில் அந்த எண்ணிக்கை 1680 என சுட்டிக்காண்பிக்கப்பட்ட போதிலும், அது 322 என மாற்றப்பட்டிருந்தது. இவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற மாற்றங்கள் அல்லது தரவு நாளதுவரையாக்கப்படாமை காரணமாக சரியான தகவல்கள் தேவையான சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.5.4 இடம்பெயர் தகவல் கேந்திரம்

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் 2012 ஆம் ஆண்டிலிருந்து பராமரிக்கப்பட்டுவரும் 24 மணித்தியால முழு நேர தகவல் வழங்கும் சேவைக்குரித்தாக பின்வரும் விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) இத்தகவல்கள் கேந்திரத்திற்கு நாளொன்றுக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் மற்றும் தகவல்களை விசாரித்தல் (E-mail, Fax, Calls, Skype) தொடர்பான தகவல்கள் முறையாக பேணப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) உள்வரும் தொலைபேசி அழைப்புக்களை பதிவுசெய்யக்கூடிய முறைமையொன்று செயற்படுத்தப்படாமை (Call Recording System)

(iii) இந்த இலக்கத்திற்கு பெறப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக தீர்வு வழங்குவதற்காக ஒவ்வொரு பிரிவிற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்த போதிலும், அம்முறைப்பாடுகள் தொடர்பான தற்போதய நிலைமை பற்றிய தகவல்கள் இப்பிரிவிற்கு தொடர்புபடுத்தப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

(iv) பணியகத்தின் செயல்விதிக்கோவை தொடர்பாக ஒவ்வொரு பிரிவுகளிலிருந்து அவ்வப்போது எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பாக இப்பிரிவு அறிவிக்கப்படாமை.

(v) இப்பிரிவிற்குரிய வழிகாட்டிக் செயல்விதிக்கோவை கைநூலொன்று தயாரிக்கப்படாமை.

(vi) மாதாந்தம் / நாளாந்தம் இந்நிலையத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட தகவல் கோரலொன்று அல்லது சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பாக தரவினை பேணாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.5.5 விசேட புலனாய்வு பிரிவினால் தரவுகளைப் பேணுதல்

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவினால் அப்பிரிவிற்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை மற்றும் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்களின் எண்ணிக்கையில் வழக்குத் தொடருவதற்காக சட்டப் பிரிவிற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்த முறைப்பாடுகள் தொடர்பான தரவுகளை கணனி மயப்படுத்தப்பட்ட போதும் அதன் மூலம் பின்வரும் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) விசேட புலனாய்வு பிரிவிற்கு வருகை தந்து மாதிரி படிவங்களைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கையும் அது தொடர்பான உரிய விபரங்களும்

(ii) மாகாண அலுவலகங்களின் பயிற்சி நிலையங்களின் மூலம் முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கையும் அவை தொடர்பான விபரங்களும்

(iii) பணியகத்தின் மத்தியஸ்த, வெளிநாட்டுத் தொடர்புகள், அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் ஆகிய பிரிவுகள் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பான விபரங்கள்

(iv) இலங்கை வெளிநாட்டு தூதுவர் அலுவலகத்தின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பான விபரங்கள்

(v) இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவுசெய்யாமல் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் வழங்கல் மேற்கொண்ட நிறுவனங்கள் / முகவர் நிறுவனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகள் தொடர்பான விபரங்கள்.

(vi) வெளிநாட்டு வேலை வாய்ப்பு வழங்கும் போது வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளை அறவிடாத நிறுவனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகள் தொடர்பான விபரங்கள்.

(vii) போலியான ஆள அடையாள அட்டையையும் போலியான அனுமதிப்பத்திரத்தையும் பயன்படுத்தி போலியான நபர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக அனுப்புதல் தொடர்பாக புலனாய்வுகள் தொடர்பான விபரங்கள்.

(viii) போலியான வயதைக் குறிப்பிட்டு தொழில் வாய்ப்பிற்காக வெளிநாடு செல்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகள் தொடர்பான விபரங்கள்.

(ix) சேவை நிபந்தனைகளை மாற்றுவது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகள் தொடர்பான விபரங்கள்.

### 3.5.6 தொடர்புடைய அரச நிறுவனங்களின் நடவடிக்கைகளின் கூட்டிணைத்தல்

**(அ) தொடர்புடைய நிறுவனங்கள்**

இலங்கை பிரசையொருவர் வெளிநாடு செல்லும் போது அவரின் அல்லது அவளின் அடையாளத்தை சரியாக இனங்காணுதல் மிகவும் முக்கியம் வாய்ந்ததொன்றாகும். இதற்காக தேவையான கடவுச்சீட்டு தயாரிக்கும் நடவடிக்கைகள் உரிய நபரின் தேசிய அடையாள அட்டையில் உள்ளடக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் உரிய நபர்களின் பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் உரிய கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளிரின் பரிந்துரையின் பேரில் இடம்பெறுகின்றது. அதன் பிரகாரம் கடவுச்சீட்டு வழங்கும் செயற்பாட்டிற்கு பிரதானமாக 3 அரச நிறுவனங்கள் தொடர்புபடுகின்றன. ஆளொருவர் பிறக்கும்

சந்தர்ப்பத்தின் போது உள்ளடக்கப்பட வேண்டிய தகவல் அடிப்படையில் பிறப்புச் சான்றிதழ் வழங்கும் பதிவாளர் நாயகத் திணைக்களம், அடையாள அட்டையை விநியோகிக்கும் ஆட்பதிவுத் திணைக்களம் மற்றும் இறுதியாக கடவுச்சீட்டை விநியோகிக்கும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் போன்ற 03 நிறுவனங்களும் அதில் உள்ளடங்குகின்றன. இந்த அனைத்து நிறுவனங்களினதும் செயற்பாடுகள் ஒன்றுக்கொன்று மிகவும் முக்கியம் வாய்ந்ததாக இருப்பதுடன், ஒவ்வொரு நிறுவனங்களின் மூலம் உருவாகும் சரியான தகவல்கள் அடிப்படையில் சரியான கடவுச்சீட்டொன்று வழங்கப்படும்.

**(ஆ) ஒன்றிணைக்கப்பட்ட தரவு முறையொன்றைப் பராமரித்துச் செல்லல்**

அதன் சரியான தன்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு இந் நிறுவனங்களுக்கு இடையே நடவடிக்கைகள் கூட்டிணைப்பதன் மூலம் குறித்த தரவுகளின் சரியானதன்மை தெளிவாகும் வகையில் இந்த 3 நிறுவனங்கள் ஒன்றிணைந்த தரவு முறையொன்றை தாபிக்கப்பட வேண்டிய தேவைப்பாடு தெளிவாக விளங்குகின்றது. இந்த அறிக்கையின் அவதானிப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போலி உயிர்வாழ் தகவல் அடிப்படையில் கடவுச்சீட்டு தயாரிக்கப்பட்டு போலியான நபர்களுக்கு வெளிநாடு செல்வதற்கு காணப்படும் சந்தர்ப்பங்கள் இத்தகவல்கள் முறைமை மூலம் கட்டுப்படுத்தப்படுவதுடன் அவ்வாறான ஒன்றிணைக்கப்பட்ட தரவு முறைமையொன்றை செயற்படுத்தும் வரை இந்நிறுவனங்களின் நடவடிக்கை இவ்விடயத்துடன் தொடர்புபடுத்தப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது.

**மதிப்பீடு**

i. இலங்கையிலிருந்து வெளியேறுகின்ற மற்றும் மீண்டும் இலங்கைக்கு வருகை தரும் பணியாளர்கள் தொடர்பான தரவுகள் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திடம் இல்லாமல் இருக்கும் போது அவசர சந்தர்ப்பத்தில் அவர்கள் தொடர்பான தகவல்களை குடிவரவு குடியகல்வு திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நேர்ந்திருந்தமை.

ii. காப்புறுதி நட்டஈட்டுக் கோரிக்கைகளுக்குரிய கொடுப்பனவு விபரங்கள் தரவு முறைமையொன்றில் பேணப்படாமையால் இடம்பெயர் தொழிலாளர்கள் அது தொடர்பாக வினவும் போது தகவல்களை வழங்க முடியாதிருந்தமை.

iii. பாதுகாப்பு இல்லங்கள் தொடர்பான தகவல்கள் நிரந்தரமாக நாளதுவரையாக்கப்பட்டு பராமரிக்கப்படாமையால் தீர்மானங்கள் எடுக்கும் போது பிரச்சினைகளுக்கு உட்பட வேண்டியிருத்தல்.

iv. 24 மணி இடம்பெயர் சேவை தொடர்பாக முறையான கட்டுப்பாடொன்று செயற்படுத்தப்படாமையால் பணியாளர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு தடை ஏற்பட்டிருத்தல்

v. விசேட புலனாய்வு பிரிவு தொடர்பான தரவுகள் நாளதுவரையாக பேணப்படாமை.

vi. போலியான தகவல்களின் பேரில் பணியாளர்கள் வெளிநாடு செல்வதற்குள்ள சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல்

**பரிந்துரை**

i. 03 பிரதான அரச நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்பட்டு பிரதான தகவல் முறைமை ஒன்றை உடனடியாக தாபித்தல் மற்றும் காப்புறுதி நட்டஈட்டைச் செலுத்துவதற்கு ஏற்றவாறு தகவல் முறைமையை பேணுதல்.

ii. பாதுகாப்பு இல்லம் தொடர்பான தகவல்களை சரியாகப் பேணுதல்.

iii. 24 மணித்தியால சேவையை ஆராய்ந்து தேவையான வழிகாட்டல் ஆலோசனைகள் மற்றும் வசதிகளை வழங்குதல்.

iv விசேட புலனாய்வு பிரிவு தொடர்பான தரவுகளை நாளதுவரையாக பராமரித்துச் செல்லல்.

**பணியகத்தின் கருத்தைத் தெரிவித்தல்**
**(3.5.1 ஆம் பந்திக்காக)**

பணியகத்தில் பதிவு செய்து கொண்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பினைப் பெற்றுச் செல்லும் பணிப் பெண்களின் பதிவுகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய தகவல் தொகுதியொன்று பணியகத்திடம் காணப்படுகின்றது. விமான நிலையத்தில் பணியக உத்தியோகத்தர்கள் பணியகத்தில் பதிவு செய்துள்ளனரா என்பது தொடர்பாகப் பரிசீலனைகள் மேற்கொண்ட போதிலும் நாட்டை விட்டு வெளியேறுதல் மற்றும் நாட்டினுள் உட்பிரவேசித்தல் ஆகிய செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு தேவையான வகையில் நடைமுறையொன்று காணப்படவில்லை.''
இதனால் பணியகத்தில் பதிவு செய்து கொண்டு வெளிநாட்டிற்குச் செல்லும் நபர்களின் குடிவரவு மற்றும் குடியகல்வு பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ள தகவல்களில் தங்கியிருக்க வேண்டியிருந்தது.

**(3.5.5 ஆம் பந்திக்காக)**

''தற்போது தகவல்களை சேமித்து வைத்தல் முறைமை தொடர்பாகத் தனித்தனியே அறிந்து கொள்ளக் கூடிய முறைமையொன்று காணப்படவில்லை. இதனால், கணனிப் பிரிவுடன் கலந்துரையாடி புதிய தகவல் களஞ்சிய முறைமையொன்றை பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்''

**(3.5.6 ஆம் பந்திக்காக)**

''மிகவும் சரியான தகவல் முறைமையொன்றை பராமரிப்பதற்காக பிரதான அரச நிறுவனமாகிய ஆட்பதிவுத் திணைக்களம், பதிவாளர் நாயகத் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் என்பனவற்றிடம் உள்ள தகவல்களை ஒன்று திரட்டுவது அத்தியாவசியமாகும்''

**3.5.7 காப்புறுதி**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து கொண்டு வெளிநாட்டிற்குச் செல்லும் அனைத்து பணிப்பெண்களும் காப்புறுதி முறைமைக்கு உரித்துடையவராவர்.

**(அ) வெளிநாட்டு வேலை காப்புறுதி**

2008 யூன் 01 ஆம் திகதி தொடக்கம் இலங்கை காப்புறுதி ''வெளிநாட்டு வேலை'' எனும் பெயரில் இக்காப்புறுதி முறைமை செயற்படுத்தப்பட்டதுடன், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் இடம்பெயர் பணியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் காப்புறுதி தவணைப் பணத்தை நேரடியாக தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பிவைத்து பணியாளர்களை காப்புறுதி முறைமைக்கு பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது. இழப்பீடு கோரல் இடம்பெறும் போது உரிய விண்ணப்பபடிவம் பணியகத்தினூடாக தேசிய காப்புறுதி நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

2012 மார்ச் 29 ஆந் திகதி முதல் காப்புறுதி முறைமை ''சஹன'' என்ற பெயரில் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு கையேற்கப்பட்டிருந்ததுடன் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்துடன் இணைந்து காப்புறுதி முறைமையை அமுல்ப்படுத்தியது. இங்கு காப்புறுதிக்காக இழப்பீடுத் வணைப் பணம் மற்றும் காப்புறுதி இழப்பீடு கோரல் இலங்கை வெளிநாட்டு வேலை

வாய்ப்பு பணியகத்திடமிருந்து இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவராண்மைக்கு வழங்குவதுடன், அதன் பின்னர் காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ்வாறு காப்புறுதி முறைமைக்காக இடைத்தரகு நிறுவனமாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தைத் தொடர்புபடுத்திக் கொள்வதற்கு ஏதுவான காரணிகள் சமர்ப்பிக்கப்படாததுடன் மேற்படி காப்புறுதி முறைமையில் பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(ஆ) “ சஹன” காப்புறுதித் திட்டம்**

2012 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் பணியாளர்களுக்குக் கிடைக்கக் கூடிய பெறுமதி வாய்ந்த உதவு தொகையாகிய ரூபா 25000 ஆன உச்ச தொகையை வழங்கும் “சஹன” காப்புறுதித் திட்டம் மூலம் தங்கியிருப்போருக்குச் செலுத்த வேண்டிய திடீர் விபத்து மற்றும் இறப்புக் காப்புறுதி நட்டஈடு பணியாளர்களுக்குக் கிடைக்கவில்லை.

(2013 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2013 யூலை 01 வரையான காலப்பகுதியினுள் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் “வெளிநாட்டு வேலை வாய்ப்பு” காப்புறுதி முறைமையின் கீழ் பணியாளர்களில் தங்கி வாழ்வோரிற்கு வருமானத்தைச் செலுத்தும் போது 23 நபர்களுக்காக இறப்பு நட்டஈடாக ரூபா 575,000 தொகையும் 15 நபர்களுக்காக வைத்திய நன்கொடை ரூபா 282,047 ஆன தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.)

**மதிப்பீடு**

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெற்றுச் செல்லும் பயணிகளுக்கான திடீர் விபத்து மற்றும் இறப்புக் காப்புறுதி நட்டஈடு புதிய காப்புறுதித் திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெறவில்லை.

**பரிந்துரை**

ஒரு காப்புறுதி முறையிலிருந்து மற்றுமொரு காப்புறுதி முறைக்கு மாறும் போது பயணிகளுக்கு உச்ச நட்டஈட்டுத் தொகை கிடைக்கக் கூடிய முறைமையொன்றை உருவாக்குதல்.

**நிறுவனத்தின் கருத்துரை**

“2012 ஆம் ஆண்டு தொடக்கம் வெளிநாட்டுப் பணியாளர்களுக்காக காப்புறுதி மேவுகை நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களினால் (தனியார்) மேற்கொள்ளப்பட்டது. அந்நிறுவனங்கள் மற்றும் பணியகம் என்பன கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தில் தங்கியிருப்போருக்கு நட்டஈட்டைப் பெற்றுக் கொடுத்தல் (Dependent Medical) தொடர்பான பிரிவொன்று உட்படுத்தப்படாதிருந்தமையினால் இச்சிக்கல் ஏற்பட்டிருந்தது. எனினும், காப்புறுதி நட்டஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான பிரிவொன்று இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் (SLIC) இலங்கை வேலை வாய்ப்புப் பணியகம் கைச்சாத்திட்ட புதிய ஒப்பந்தத்தில் அடங்கி இருப்பதுடன் அது தற்போது நடைமுறைப்படுத்தப்படும் மட்டத்தில் உள்ளது”

## 3.6 வேலை முகவர் நிறுவனங்களின் பணிகள்

வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறையினுள் தொழில் முகவர் நிறுவனங்களின் பணி மிக முக்கியமாக அமைவதுடன் அந்நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் சட்ட ரீதியாகப் பராமரித்தல் என்பன தொடர்பாக பரிசீலனை செய்தல் என்பன இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கு அமைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் முகவர் நிலையங்களைப் பதிவு செய்வது தொடக்கம் பரிசீலனை மேற்கொள்ளுதல் வரையான செயற்பாடுகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் அவ்வாறான குறைபாடுகளினால் வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பல விரம்பத்தகாத செயற்பாடுகளினால் இடம்பெயர் பணியாளர்களுக்கு ஏற்படும் பல இன்னல்கள் நிகழுவது அவதானிக்கப்பட்டது. அது தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### 3.6.1 வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் தமது கடமைகளை நிறைவேற்றுதல்.

#### (அ) சிக்கல்கள் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படல்.

மத்திய கிழக்கில் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் பல பணியாளர்கள் முகம் கொடுக்கக் கூடிய பிரச்சினைகளில் உரிய நாட்டில் தொழில் வழங்குபவர்களினால் ஏற்படுத்தப்படும் கொடுமைகள் தவிர, உரிய வேலை முகவர் நிலையங்கள் தமது கடமைகளைச் சரியான முறையில் நிறைவேற்றாத காரணத்தினால் சிக்கல்களுக்கு முகம் கொடுக்கும் சந்தர்ப்பங்கள் தொடர்பாக பல்வேறு தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டன. இதற்கமைய, கடந்த 3 வருட காலத்தில் பிரச்சினைகள் ஏற்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பான சுருக்கமான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | ஆண்டு | | |
|---|---|---|---|---|
| | காரணம் | 2010 | 2011 | 2012 |
| i. | முறைப்பாடு தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை | 288 | 262 | 232 |
| ii. | காயங்களுக்கு நட்டஈடு செலுத்தாமை | 4 | 3 | 3 |
| iii. | இணங்கப்பட்ட சம்பளங்களைச் செலுத்தாமை | 5 | 4 | 2 |
| iv. | சம்பளங்கள் கிடைக்காமை | - | - | 2 |
| v. | உறவினர்களினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் | - | - | 90 |
| vi. | தூதுவராலயங்களினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்கள் | - | - | 6 |
| vii. | ஏனைய வேலைவாய்ப்பு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்கள் | - | - | 8 |
| viii. | பயிற்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்கள் | - | - | 1 |
| ix. | வேறு வேண்டுகோள்கள் | 22 | 6 | 92 |
| x. | கறுப்புப் பட்டியலுக்குட்ட சந்தர்ப்பங்கள் | 319 | 275 | 436 |
| xi. | மீண்டும் செயற்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் | 296 | 248 | 427 |

இதற்கமைய மேற்படி சிக்கல்கள் வருடாவருடம் அதிகரிக்கின்ற போக்கொன்று காணப்படுவதுடன், வேலை முகவர் நிலையங்களில் செயற்பாடுகள் தொடர்பாகப் போதிய கவனம் செலுத்த வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

இவ்வாறான வேலை முகவர் நிலையங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் சிறிது காலத்திற்கேனும் அல்லது சில தினங்களுக்கு பதிவை இரத்துச் செய்து மீண்டும் செயற்படுத்தும் செயற்பாடானது இப்பிரச்சினைகளுக்கான தீர்வு அல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

#### (ஆ) அனுமதிப்பத்திரம் புதுப்பிப்பதற்கு முன் விதந்துரைகளைப் பெற்றுக் கொள்ளுதல்

வேலை முகவர் நிலையங்களின் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரங்களை மீளப் புதுப்பிப்பதற்கு முன், மத்தியஸ்த, புலனாய்வு மற்றும் சட்டம் ஆகிய துறைகளில் அறிக்கைகள் பெறப்பட வேண்டும் எனவும் அதில் காணப்படும் தகவல்களுக்கு அமைய அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்படுவதற்கான விதந்துரைகள் வழங்கப்படவில்லையென்றால் அனுமதிப்பத்திர உடமையாளருக்கு அது தொடர்பாக

எழுத்து மூலம் அறிவித்தல் வழங்கி அவ்வப்பிரிவுகளுடன் தொடர்பு கொள்வவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் அதன் மூலமாக அப்பிரிவுகளின் பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் அதன் அனுமதிப்பத்திர பிரிவிற்காக தயாரிக்கப்பட்ட கைநூலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கு அமைய அனுமதிப்பத்திரமொன்றைப் புதுப்பிப்பதற்கு முன் மத்தியஸ்த, புலனாய்வு, சட்டம் ஆகிய துறைகளில் அம்முகவர் நிலையங்கள் தொடர்பாகக் கோரப்படும் தகவல்களின் அடிப்படையில் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிக்குமாறு விதந்துரைக்கப்படாத சந்தர்ப்பத்தில் ஒரு வருட காலமாக அம்முகவர் நிலையங்கள் தொடர்பாகத் தீர்த்து வைக்கப்படாத முறையீடுகளை விசாரணை செய்து அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்துக் கொள்வதற்கு முகவர் நிலையங்கள் முயற்சிப்பது அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2411 ஆம் இலக்க அனுமதிப்பத்திரத்தையுடைய நிறுவனத்தின் அனுமதிப்பத்திரத்தை 2012 மே 03 ஆம் திகதி புதுப்பிப்பது தொடர்பாக மத்தியஸ்த, புலனாய்வு மற்றும் சட்டப் பிரிவுகளில் தகவல்கள் கோரப்பட்டிருந்தன. இதற்கு அமைய, மத்தியஸ்த பிரிவிற்கு 2012 மே 24 வரை கிடைக்கப் பெற்றிருந்த 12 முறைப்பாடுகளில் 11 முறைப்பாடுகள் தீர்க்கப்படாதிருந்தமையினால் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கான பரிந்துரை வழங்கப்படவில்லை. இந்நிலைமை தொடர்பாக 2012 யூலை 09 ஆம் திகதி தொழில் முகவர் நிலையத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டுள்ளதாக அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு 2012 யூலை 16 ஆம் திகதி மத்தியஸ்த பிரிவினால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 2012 செப்தெம்பர் 14 ஆம் திகதி தொடக்கம் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 1555 ஆம் இலக்க அனுமதிப்பத்திரத்தையுடைய நிறுவனம் 1998 நவெம்பர் 11 ஆம் திகதி தொடக்கம் அனுமதி பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையமொன்றாகும். 2010 ஆம் ஆண்டில் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்காக மத்தியஸ்த / புலனாய்வு ஆகிய பிரிவுகளில் தகவல்கள் கோரப்படும் போது 2010 ஆகஸ்ட் 13 ஆம் திகதி வரை கிடைக்கப் பெற்ற 165 முறைப்பாடுகளில் 65 தீர்த்து வைக்கப்படாதிருந்தமையால் இந்நிலையத்தின் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக அனுமதிப்பத்திரப் பிரிவின் முகாமையாளர் 2010 ஆகஸ்ட் 19 ஆம் திகதி அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தவருக்கு அறிவித்ததுடன் 2010 நவெம்பர் 08 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தீர்க்கப்படாத முறைப்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்தமையினால் அனுமதிப்பத்திரத்தை நீடிப்பதற்கு விதந்துரைப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

- அவ்வாறே 2010 மார்ச் 26 ஆம் திகதி வெளிநாட்டில் பணிப்பெண்ணாகச் சென்ற பெண் ஒருவரின் பிரச்சினை தீர்க்கப்படாத காரணத்தினால் 2011 மார்ச் 03 ஆம் திகதி தொடக்கம் இவ் முகவர்க்கு உரிய அனைத்து அங்கீகாரங்களும் இடை நிறுத்தப்படுவதாக பணியகத்தின் பொது முகாமையாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

- 2011 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிப்பதற்கு மத்தியஸ்த மற்றும் புலனாய்வுப் பிரிவுகளினால் தகவல்கள் கோரப்பட்ட போது 2011 ஆகஸ்ட் 25 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற 166 முறைப்பாடுகளில் 34 முறைப்பாடுகள் தீர்க்கப்படாத காரணத்தில் அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டிருக்க வில்லை. அனுமதிப்பத்திரப் பிரிவினால் அது தொடர்பாக 2011 செப்தெம்பர் 02 ஆம்

திகதி அனுமதிப்பத்திரதாரருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பின் தீர்க்கப்படாதிருந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விண்ணப்பதாரி நடவடிக்கை எடுத்திருந்தமையினால் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்கு பரிந்துரைப்பதாக 2011 ஒக்தோபர் 02 ஆம் திகதி மத்தியஸ்த முகாமையாளர் அறிவித்திருந்தார். அவ்வாறே 2011 நவெம்பர் 08 ஆம் திகதிய வெளிநாட்டு உறவுகள் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததன் படி மத்தியஸ்த பிரிவினால் இடம்பெயர் பணியாளர்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணுவதற்காக நியமிக்கப்பட்டிருந்த மத்தியஸ்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும் சமூகமளிக்காத காரணத்தினால் இடம்பெயர் பணியாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அக்கறை காட்டவில்லை என்பதனையும் இவ்விடயம் தொடர்பாக உரிய நிறுவனத்தின் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிக்கும் போது அதிக கவனத்தைச் செலுத்துமாறும் அறிவிக்கப்பட்டிருந்தது.

### 3.6.2 வெளிநாட்டு தொழில் முகவர் நிறுவனம் தமது செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

வெளிநாட்டு தொழில் முகவர் நிறுவனங்களால் இடம்பெயர் பணியாளர்கள் வெளிநாடு செல்லும் போது நிறைவேற்றப்பட வேண்டிய ஆரம்ப செயற்பாடுகள் உட்பட தொழில் நிலையங்களுக்கு தொடர்புபடும் போது உரிய இடம்பெயர் பணியாளர்களுக்கு எழக்கூடிய சிக்கல்கள் தொடர்பாக அறிந்ததன் பின்னர் தேவையான தலையீடு செய்யப்படுகின்றது. இங்கு இடம்பெயர் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் 2 பகுதிகளின் கீழ் கலந்துரையாடப்படும்.

**(அ) வெளிநாடு செல்வதற்கு முன்னர் ஏற்படும் பிரச்சினைகள்**

வெளிநாடு செல்வதற்கு எதிர்பார்க்கும் ஒருவர் அதற்காக தொழில் முகவர் நிறுவனமொன்றைத் தெரிவுசெய்வது முதல் சேவைக்காக வெளியேறிச் செல்லும் வரையான செயற்பாடுகளின் போது தொழில் முகவர் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற போலியான நடவடிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டன. இந்நடவடிக்கைகளை தவிர்ப்பதற்காக உரிய ஒழுங்குபடுத்தல் நடவடிக்கையொன்று செயற்படுத்தப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

- குறைந்த வயது பெண்களை போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி வெளிநாடுட்டுக்கு அனுப்பிவைத்தல்.
- பணியகத்தின் அங்கீகரிக்கப்பட்ட விலை விபரங்களை விட கூடுதலான பணத்தைப் பெற்றுக்கொள்ளல்.
- சரியான மருத்துவ பரிசோதனைகளுக்காக தொடர்புபடுத்தாமை.
- இணங்கப்பட்ட தொழில்களை விட ஏனைய தொழில்களுக்கு தொடர்புபடுத்தல்.
- வெளிநாடு செல்வதற்காக (வீட்டுப் பணிப்பெண்களுக்கு) வழங்குவதற்கு உடன்படும் தரகுப் பணத்தினை குறைத்து வழங்குதல் மற்றும் வழங்காமலிருத்தல்.

**(ஆ) சேவையில் ஈடுபட்டிருக்கும் போது ஏற்படுத்தப்படுகின்ற இடையூறுகள்**

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) சேவைக்காக வெளியேறும் இடம்பெயர் பணியாளர்கள் வேலை நிலையங்களில் தொழில் புரியும் வேலைகளில் ஏற்படும்

சிக்கல்களுக்காக முறைப்படி தலையிட்டு செயல்படுவதற்குப் பதிலாக இடையூறுகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் தெரிவுப் பரிசோதனைகளின் போது கண்டறிப்பட்டது.

(ii) இனங்கப்பட்ட சம்பளங்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்த சந்தர்ப்பங்களில் அதற்கான முன்னின்று நியாயத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை.

(iii) பிரச்சினைகளுக்கு உட்பட்டு நிவாரணங்களை இடம்பெயர் பணியாளர்கள் வேறு கஷ்டங்கள் அல்லது நலன்கள் குறைந்த தொழில்களுக்கு தொடர்புபடுத்தி அதற்காக கிடைக்க வேண்டிய சம்பளத்தை செலுத்தாமைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை

மேற்படி இரண்டு வகைகளின் கீழ் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் விரிவாக கீழே கலந்துரையாடப்படுகின்றன.

**(இ) வயது குறைந்த பெண்களை போலியான ஆவணங்களை பயன்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்புதல்**

வீட்டுப் பணிப்பெண்களாக பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் போது மத்திய கிழக்கு தொழில் முகவர் நிறுவனங்கள் மூலம் இலங்கை தொழில் முகவர் நிலையங்களுக்கு வழங்கப்படுகின்ற தரகுப் பணம் காரணமாக அவர்களின் வயது, உடற் தகுதி போன்ற விடயங்கள் தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் வெளிநாடுகளுக்கு அனுப்பிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பாக தெரிவுக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டதுடன் அதனால் ஏற்படக்கூடிய பாதகமான பெறுபேறுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) போலியான வயதைக் குறிப்பிட்டு வயதுவந்தவராக வெளிநாடு சென்றதன் பின்னர் இடம்பெறும் ஏதேனும் பிரச்சினையொன்றின் போது சட்டரீதியான நிவாரணமொன்றை பெற்றுக்கொள்ள முடியாமை.

(ii) இவ்வாறான நிலைமையொன்றின் போது அந்நாட்டின் சட்டவிதிகளின் பிரகாரம் கிடைக்கும் தண்டணையிலிருந்து (மரண தண்டணையிலிருந்து) விடுவித்துக்கொள்ள முடியாமை.

(iii) அனுபவம் குறைந்தமையால் வேலைகளை முறையாக நிறைவேற்ற முடியாத சிக்கல்கள் ஏற்படல்.

(iv) சிக்கலான நிலைமையின் போது உண்மையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டு காப்புறுதி மற்றும் நலன்புரி இழப்பீட்டினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமை.

**(ஈ) போலியான அடையாள அட்டையைத் தயாரித்தல்.**

தொழில் முகவரொன்றினால் 2012 யூன் 10 ஆந் திகதி வயது குறைந்த 04 பெண்களை வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாட்டிற்கு அனுப்பவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் பதுளை பொலிஸ் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் புலனாய்வுப் பிரிவு என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டிருந்தன் பிரகாரம் அப்பெண்களுக்காக போலியான அடையாள அட்டைகளைத் தயாரித்து அதன் பிரகாரம் கடவுச்சீட்டுக்களும் தயாரிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது உறுதிப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக இலங்கை வெளிநாட்டு வேலை

வாய்ப்பு பணியகத்தின் புலனாய்வுப் பிரிவினால் புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தற்காலிகமாக அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டு மீண்டும் வழங்கப்பட்டிருந்தது.

**(உ) போலியான தகவல்களை பயன்படுத்தி வெளிநாடு செல்வதால் ஏற்படுகின்ற பாதகமான தாக்கம்**

இன்னுமொரு தொழில் முகவரொன்றினால் 2010 பெப்ரவரி 05 ஆந் திகதி போலியான கடவுச்சீட்டொன்று மூலம் 1993 பெப்ரவரி 27 ஆந் திகதி பிறந்த சிறுமியொருவர் வீட்டுப்பணிப்பெண் சேவைக்காக சவுதி அரோபியாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தார். அதன் பின்னர் அவ்வாண்டில் ஏப்ரல் 12 ஆந் திகதி திடீர் விபத்தொன்றில் மரணமடைந்திருந்தார். இச்சிறுமிக்காக 2005 திசெம்பர் 09 ஆந் திகதி வழங்கப்பட்ட கடவுச்சீட்டில் குறிப்பிடப்பட்ட தகவல்களின் பிரகாரம் இச்சிறுமியின் புகைப்படத்தினைப் பயன்படுத்தி மற்றுமொரு கடவுச்சீட்டு தயாரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பிள்ளையின் தந்தை மரணம் சந்தேகத்திற்கிடமானதென்ற முறைப்பாட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வின் பிரகாரம் போலியான தகவல்களைப் பயன்படுத்தி வெளிநாட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தமையால் இழப்பீடொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் போலியான கடவுச்சீட்டு மூலம் அவரை வெளிநாட்டிற்கு அனுப்பிய முகவர் நிறுவனத்திற்கு எதிராக எவ்வித சட்டரீதியான நடவடிக்கையொன்றும் எடுக்கப்படாதிருந்ததுடன், அந்நிறுவனத்திற்கு தற்காலிக அனுமதிப்பத்திரமொன்று 2013 ஆம் ஆண்டிற்காகவும் வழங்கப்பட்டிருந்தது. போலி கடவுச்சீட்டு விநியோகம் தொடர்ந்தும் இடம்பெறுவதால் இடம்பெயர்ந்த பணியாளர்களுக்கு இடம்பெறும் சிக்கலானதன்மையை தவிர்ப்பதற்கு உரிய நிறுவனங்கள் மூலம் முறையான நடைமுறையொன்று செயற்படுத்தப்படாமையால் இவ்வாறான மோசடியுடன்கூடிய சம்வங்களுக்கு இடமளிக்கப்பட்டிருந்தன.

**(ஊ) போலியான தகவல்களை பயன்படுத்தி வெளிநாடு செல்வோருக்கு சட்டத்தை கடுமையாக செயற்படுத்துல்**

திருகோணமலை மாவட்டத்தின் மூதூரில் வசித்த சிறுமியொருவர் 1988 பெப்ரவரி 02 ஆந் திகதி பிறந்திருந்தார். வெளிநாடு செல்வதற்காக அவளின் வயது போதியதாக இல்லாமையால் போலியான ஆவணங்கள் மூலம் வயது 24 எனக் குறிப்பிடப்பட்டு 2005 ஏப்ரல் 01 ஆந் திகதி சவுதி அரோபியாவில் வீடொன்றில் பிள்ளையொன்றைப் பார்த்துக்கொள்வதற்காக தொழில் முகவரொருவர் மூலம் வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டிருந்தார்.

2005 மே 26 ஆந் திகதி இச்சிறுமியால் கவனிக்கப்பட்ட பச்சிளங் குழந்தையின் தொண்டையில் பால் இருகியதன் காரணமாக குழந்தை மரணித்ததாக அவளால் சொல்லப்பட்டிருந்த போதிலும், அத்தவறுக்கு குற்றவளியாக்கப்பட்டு சிறையில் அறையப்பட்டும் அதன் பின்னர் 2013 சனவரி 09 ஆந் திகதி அவளின் கழுத்து வெட்டி கொல்லப்பட்டிருந்தது.

1996 சவுதி அரோபிய இராச்சியத்தின் சிறுவர் உரிமைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் சாசனத்தில் கைச்சாத்திட்டிருந்ததுடன் சிறுவர்களை பாதுகாப்பு சேவையில் ஈடுபடுத்துவதற்கு எதிரான சர்வதேச சாசனத்திற்கு இணக்கத்தை தெரிவித்திருந்த போதிலும், இச்சிறுமி தொடர்பாக 18 வயதுக்கு குறைந்த ஒருவராக இருந்த போதிலும், போலியாக தயாரிக்கப்பட்டிருந்த கடவுச்சீட்டில் அவளின் பிறந்த வருடம் 1982 ஆக குறிப்பிடப்பட்டமையால் அவளுக்கு பாதுகாப்பு மற்றும் சட்டரீதியான பாதுகாப்பு இழக்கப்பட்டிருந்தது.

**(எ) வெளிநாடு செல்வதற்காக பணம் அறவிடுதல்**

ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிந்த போதிலும், உரிய தொழில் முகவர் நிறுவனங்களினால் வெவ்வேறு அளவில் இடம்பெயர் பணியாளர்களிடம் பணம் அறவிடப்படுவது கணக்காய்வின் போது கண்டறியப்பட்டன. விபரங்கள் பின்வருமாறு காணப்பட்டன.

(i) விசேட புலனாய்வுப் பிரிவின் INW/119/1108 ஆம் இலக்கத்தின் கீழ் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் கட்டார் இராச்சியத்தில் அலுவலக உதவியாளராக தொழிலொன்று பெற்றுத்தருவதாக உடன்பட்டு ரூபா 105,000 தொகையொன்று பெற்றுக்கொண்டு போலியான தொழில் உடன்படிக்கையில் கையொப்பமிட்டு அந்நாட்டில் கைவிடப்பட்டிருந்ததாக இலங்கை புலம்பெயர் பணியாளர் ஒருவர் தெரிவித்திருந்தார். அதன் பிரகாரம் உறவினர்களால் அவரை இலங்கைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், விசேட புலனாய்வுப் பிரிவு தலையிட்டிருந்தமையால் முகவரிடமிருந்து ரூபா 75,000 ஆன தொகையினை இந்நபருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii) CN/151/1205 ஆம் இலக்க முறைப்பாட்டின் பிரகாரம் துபாய் நாட்டில் டக்சி சாரதி பதவியொன்றுக்காக 2010 மார்ச் 15 ஆந் திகதி பணியாளியொருவர் வெளிநாடு சென்றிருந்ததுடன் அதற்காக அவர் உள்ளூர் முகவர் தொழில் நிறுவனத்திற்கு ரூபா 350,000 ஐ வெளிநாடு செல்வதற்கு முன்னர் செலுத்தப்பட்டிருந்தது. தங்குமிட வசதிகளும் மருத்துவ வசதிகளும் இலவசமாக வழங்கப்படுமெனவும் மாதச் சம்பளம் ரூபா 150,000 என அவர் அறிவுறுத்தப்பட்டிருந்தார். எனினும் வெளிநாடு சென்று 9 மாதங்களாக தொழிலொன்று இல்லாமல் இருந்தமையால் கடனைச் செலுத்துவதற்கு நேர்ந்தமையாலும் உடன்பட்டபடி சேவைகள் மற்றும் வசதிகள் கிடைக்கவில்லை என முறைப்பாட்டாளரால் குறிப்பிடப்பட்டிருந்தது. இங்கு முறைப்பாட்டை தீர்வுசெய்வதற்கு கையளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் குறிப்பிடப்பட்டிருந்த குறிப்பின் பிரகாரம் தரகுப் பணத்தின் அடிப்படையில் சம்பளம் பெறக்கூடிய தொழிலொன்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் உள்ளூர் தொழில் முகவர் நிறுவனம் கறுப்பு பட்டியலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

அதன் பிரகாரம் முறைப்பாட்டாளருக்கு நிவாரண நிலைமையொன்றை ஏற்படுத்திக் கொடுக்க முடியாதிருந்ததுடன் அறியாத்தன்மையால் அவர் இவ்வாறு சிக்கல்களுக்கு உட்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

**(ஏ) வெளிநாடு செல்வதற்காக தரகுப் பணம் வழங்குதல்**

(i) இலங்கைப் பணியாளர்கள் வீட்டுப் பணிப்பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளில் சேவை புரிவதற்காக அனுப்பிவைக்கும் போது குறித்த நாட்டின் வெளிநாட்டு சேவை முகவர்களால் இந்நாட்டின் வெளிநாட்டு தொழில் முகவர்களுக்குரிய குறித்த பணியாளர்களுக்காக தரகுப் பணமொன்று வழங்கப்படுவதாகவும் இந்நாட்டின் வெளிநாட்டு தொழில் முகவர் நிறுவனங்கள் தமது உப முகவர்களுக்கு அத்தரகுப் பணத்தில் ஆகக் குறைந்தது ரூபா 200,000 இற்கு மேற்பட்ட தொகையினை வழங்கி அப்பணத்தில் ரூபா 100,000 இற்கு அண்மித்த தொகையினை வெளிநாடு செல்லும் பணியாளருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை

எடுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் தொடர்பாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவின் கோவைகளைப் பரீட்சித்த போது உறுதிப்படுத்தப்பட்டதுடன் இத்தரகுப் பணம் உள்நாட்டு தொழில் முகவர் நிறுவனங்களின் பிரதான வருமான மார்க்கமொன்றாக இருப்பதாகவும் உப முகவர்களுக்கும் உரிய பணியாளர்களுக்கும் செய்யப்படும் கொடுப்பனவுப் பெறுமதிகளிலிருந்து மேலும் உறுதிப்படுத்தப்பட்டது.

(ii) இத்தரகுப் பணம் தொடர்பாக உரிய தரப்பினருக்கிடையே ஏற்படும் சிக்கல்கள் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவிற்கு நாளாந்தம் கிடைப்பதாகவும் வெளிநாடு செல்லும் சில பெண்களுக்கு இத்தரகுப் பணத்தில் எதுவும் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்கள் உள்ளதாகவும் இறுதியாக குறித்த இடம்பெயர் பணியாளர்களுக்கு குறைந்த தொகையொன்றே கிடைப்பதாகவும் அது தொடர்பாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு அடிக்கடி தலையிடுவதற்கு நேரும் சந்தர்ப்பங்கள் உள்ளதாக மேலும் அவதானிக்கப்பட்டது.

(iii) இத்தரகுப் பணம் குறித்த நபர்களால் பெற்றுக்கொண்டதன் பின்னர் அந்நபர்களுக்கு அந்த பிணைப்புக்களிலிருந்து விலகி வெளிநாடு செல்வதை நிராகரிக்கவோ அல்லது வேறு நிறுவனமொன்றுக்கு தொடர்புபடுத்துவதற்கோ இயலுமை இல்லாமல் இருந்ததுடன் அவ்வாறு ஏனைய தொழில் முகவர் நிறுவனமொன்றுக்கு தொடர்பபடுத்துவதை தவிர்ப்பதற்காக எப்போதும் உரிய நபர்களின் கடவுச் சீட்டினை தடுத்து வைப்பதற்கும் அம்முகவர்கள் நடவடிக்கை எடுக்கின்றனர். அந்த தரகுப் பணத்தின் பரிமாற்றம் முறையாக நியாயமாகவும் நிறைவேற்றுவதற்கு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் நேரடி தலையீட்டின் அடிப்படையில் இடம்பெற வேண்டிய அடிப்படை தேவைப்பாடொன்றாக இருப்பது கண்டறியப்பட்டது.

**(ஐ) இணங்கப்பட்ட தொழிலை விட வேறு தொழில்களுக்கு தொடர்புபடுத்தல்**

இவ்வாறான நிலைமைகள் அநேகமாக ஆண் பணியாளர்களுக்கே முகங்கொடுக்க நேர்ந்திருந்தது. சாரதி அல்லது ஏனைய தொழில்களுக்காக வெளிநாடு சென்ற ஊழியர்கள் மத்திய கிழக்கில் கால்நடைப் பண்ணைகளிலும் பாலைவனங்களை அண்மித்தும் மிகவும் கடினமான தொழில்களுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தமையும் அதன் காரணமாக உறவினர்களால் மீண்டும் பணம் செலவழித்து சிரமமாக அவர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

**(ஒ) சேவையின் போது இடையில் ஏற்படும் பிரச்சினைகள்**

சேவைக்காக வெளியேறும் ஊழியர்களுக்கு தமது சேவையை செய்து கொண்டு போகும் போது முறைப்படி சம்பளம் கிடைக்காமை, இனங்கப்பட்ட தொழில் கிடைக்காமை, பாலியல் மற்றும் உடல்சார் துன்புறுத்தல்கள் போன்ற காரணங்களின் பேரில் வெளிநாட்டு தொழில் முகவர் நிறுவனங்களுக்கு ஏதேனும் நிவாரணமொன்றை எதிர்பார்த்து வருகை தரும் போதும் அந்த இடம்பெயர் பணியாளர்கள் மற்றும் உடல்சார் துன்புறுத்தல்களுக்கு உட்படும் சந்தர்ப்பங்கள் இருந்ததாக முறைப்பாடுகள் தொடர்பான கோவைகள் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

i. CN/411/1206 ஆம் இலக்க முறைப்பாட்டின் பிரகாரம் வீட்டுப் பணிப்பெண்ணாக வெளிநாடு சென்ற பெண்மணியொருவர் 2012 மே

06 ஆந் திகதி வெளிநாடு சென்று 07 நாட்களில் வீட்டுடமையாளர்களின் உடலியல் ரீதியான தொல்லை காரணமாக அந்நாட்டின் முகவர் நிறுவனமொன்றுக்கு முறைப்பாடு செய்த போது அவர் சிறையில் அடைக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் 2012 யூன் 19 ஆந் திகதி முதல் இந்த பணிப்பெண்ணை இலங்கைக்கு கூட்டி வரும் வரை இந்த வெளிநாட்டு தொழில் நிறுவனத்தின் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 2012 யூன் 08 லக்பிம பத்திரிகையிலும் 11 இலங்கை வீட்டுப் பணிப்பெண்கள் பலவந்தமாக சிறையிலிடப்பட்டுள்ளதாக செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

ii. CD/229/1205 - 02 ஆம் இலக்க முறைப்பாட்டின் கீழ் 2012 மார்ச் 27 ஆந் திகதி வெளிநாடுசென்ற ஒருவரின் உறவினரொருவரால் 2012 மே 10 ஆந் திகதி செய்யப்பட்ட முறைப்பாடொன்றின் பிரகாரம் வெளிநாடு சென்று 2 மாதங்கள் வேலை செய்த வீட்டில் சம்பளம் வழங்காமை மற்றும் முகங்கொடுப்பதற்கு ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக அந்நாட்டு பொலிசில் முறைப்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும் அப்போது அப்பெண்ணை வெளிநாட்டு தொழில் முகவர் நிறுவனத்தில் ஒப்படைத்தாகவும் அவ்விடத்திலிருந்து இன்னுமொரு முகவர் நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டதாகவும் அவ்விடத்தில் உடலியல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்கு உட்பட்டமையால் அடிக்கடி சுயநினைவிழப்பதாகவும் அதனால் அவரை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருமாறு கோரப்பட்டிருந்தது.

இது தொடர்பாக அவ்விடத்தில் இலங்கையின் 30 பெண்கள் உட்பட 250 வெளிநாட்டு வீட்டுப் பணிப்பெண்கள் அளவில் 2012 ஆம் ஆண்டிலிருந்து தடுத்துவைத்திருப்பதாக அவரால் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பின்னர் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் இம்முறைப்பாடு பரீட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் 2012 யூன் 28 ஆந் திகதி வெளிநாட்டு தொழில் முகவரின் அனுமதிப்பத்திரத்தை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் 2012 யூலை 02 ஆந் திகதி மீண்டும் அது செல்லுபடியாக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 04 நாட்கள் அளவிலான காலத்திற்காக வெளிநாட்டு தொழில் முகவரின் அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு 2012 ஆகஸ்ட் 15 ஆந் திகதி பணிப்பெண் இலங்கை திரும்பி வருகை தந்ததாக தொலைபேசி மூலம் உறுதிப்படுத்தியதாக குறிப்பிட்டு கோவை மூடப்பட்டிருந்தது.

### 3.6.3 வெளிநாட்டு தொழில் முகவர் நிலையங்களை தரப்படுத்துதல்

இலங்கையின் வெளிநாட்டு தொழில் சந்தையை முறைப்படுத்தும் செயற்பாடொன்றினூடாக எடுத்துச் செல்லும் நோக்கில் அதற்கு பங்களிக்கும் வெளிநாட்டு தொழில் முகவர் நிறுவனங்கள் 02 வருடங்களுக்கு ஒருமுறை கீழே காட்டப்பட்டுள்ள 03 நியதிகள் ஊடாக தரப்படுத்தப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டின் போது தரப்படுத்தப்பட்ட விபரங்களை கருத்திற் கொள்ளும் போது மத்திய கிழக்கு வலயத்தின் பல வெளிநாட்டு தொழில் முகவர் நிலையங்கள் தரப்படுத்தலில் மிகவும் குறைந்த மட்டத்தில் அதாவது 125 புள்ளிகளுக்கு குறைவாக பெற்றுக்கொண்ட E தரத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**தரப்படுத்தலுக்குரிய நியதிகள்**

i. இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்த தொழில் வாய்ப்புக்கள் அளவு

ii. வெளிநாட்டில் இலங்கை இடம்பெயர் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பும் நலன்புரி வசதிகளும்

iii. இலங்கையுடனான வியாபார தொடர்புகள்

| **நாடு** | **மொத்த முகவர்களின் எண்ணிக்கை** | **A (புள்ளி 200 இற்கு மேல் 4 நட்சத்திரம்** | **B (புள்ளி 175 இற்கும் 200 இற்கு இடையே) 3 நட்சத்திரம்** | **C (புள்ளி 150 இற்கும் 175 இற்கு இடையே) 2 நட்சத்திரம்** | **B (புள்ளி 125 - 150 இற்கு இடையே) 1 நட்சத்திரம்** | **E (புள்ளி 125 இற்கும் கீழ்** |
|---|---|---|---|---|---|---|
| அபுதாபி | 32 | 01 | 01 | 02 | 07 | 21 |
| துபாய் | 76 | 06 | 03 | 07 | 14 | 46 |
| ஜோர்தான் | 69 | - | 01 | 04 | 14 | 50 |
| ஓமான் | 30 | 01 | 03 | 01 | 07 | 18 |
| லெபனான் | 21 | 01 | - | 02 | 09 | 9 |
| சவுதி அரேபியா | 107 | 21 | 16 | 18 | 22 | 30 |
| குவைட் | 23 | 06 | 02 | 05 | 10 | 30 |
| கட்டார் | 119 | 13 | 25 | 32 | 26 | 23 |

இதன் பிரகாரம் மேற்குறித்த நாடுகளுக்குரித்தாக காணப்படும் தொழில் முகவர் நிலையங்களில் 50% இற்கு மேற்பட்ட முகவர்களின் எண்ணிக்கையொன்று தரப்படுத்தலில் குறைந்த மட்டத்தில் இருப்பதால் முகவர் நிறுவனங்கள் ஊடாக பணியாளர்களை வெளிநாட்டிற்கு அனுப்பும் போது இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் அந்நிறுவனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தலையீடு மிகவும் விரிவாக இருக்க வேண்டுமென அவதானிக்கப்பட்டது.

**மதிப்பீடு**

i. உள்நாட்டு தொழில் முகவர் நிறுவனங்களின் அனுமதிப்பத்திரத்தை வருடாந்தம் புதுப்பிக்கும் போது வெளிநாடு செல்லும் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு பொறுப்பேற்றலை ஏற்காத நிறுவனங்கள் தொடர்பில் இலகுவான கொள்கையொன்றை பின்பற்றியமையால் அவர்கள் அசாதரணத்திற்குட்படும் சந்தர்ப்பத்தில் தலையீடு திருப்திகரமாக இருக்கவில்லை.

ii. புதிய தொழில் முகவர் நிறுவனங்களைப் பதிவுசெய்யும் போது மத்திய கிழக்கு தொழில் முகவர் நிறுவனங்களை தரப்படுத்தலில் கீழ் மட்டத்தில் உள்ள நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கல்கள் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டதென்பது தொடர்பாக உறுதிப்படுத்தலொன்று பெற்றுக்கொள்ளப்படாததன் காரணமாக இடம்பெயர் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் அதிகரித்திருந்தன.

iii. முறைப்பாட்டிற்காக பொறுப்பேற்றலின் போது நல்லபோக்கென்றை காண முடியாமை.

iv. போலியான ஆவணங்களைத் தயாரித்து ஆட்களை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கு முயற்சிகளை எடுக்கும் தொழில் முகவர் நிறுவனங்கள் தொடர்பாக இலகுவான கொள்கையொன்றைப் பின்பற்றுவதனால் மீண்டும் மீண்டும் அவ்வாறான தவறுகள் இடம்பெறுவதற்கான போக்கு காணப்படல்.

v. உள்நாட்டு தொழில் முகவர் நிறுவனங்களினூடாக வீட்டுப் பணிப்பெண்களை வெளிநாட்டிற்கு அனுப்பும் போது வழங்கப்படும் தரகுப்பணம் காரணமாக சிக்கல்கள் ஏற்படுதல்.

**பரிந்துரைகள்**

i. இடம்பெயர் பணியாளர்களின் சிக்கல்களுக்காக தீர்வு வழங்குவதை தாமதப்படுத்தல் அல்லது பொடுபோக்காக இருக்கும் தொழில் முகவர் நிறுவனங்களின் அனுமதிப்பத்தரத்தினை புதுப்பிக்கும் போது தற்போது காணப்படும் முறைமைக்குப் புறம்பாக (முறைப்பாட்டிற்காக கருணையுடன் தலையிடாத தொழில் முகவர் நிறுவனங்கள் தொடர்பாக) கடுமையான நடைமுறையொன்று பின்பற்றுதல்

ii. உள்ளூர் தொழில் முகவர்கள் மற்றும் இடைத் தரகர்கள் ஆகியோருக்கிடையே தரகுப் பண பரிமாற்றம் தொடர்பாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தலையிட்டு ஏதேனும் நடைமுறையொன்றை தயாரித்தல்

iii. புதிய வெளிநாட்டு தொழில் முகவர் நிறுவனங்களுக்காக அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது பொருண்மையான அதிகரிப்பினை விட தரமான மேம்பாட்டிற்கு கவனம் செலுத்துதல்.

iv. மிகவும் சிறந்த வெளிநாட்டு தொழில் முகவர் நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு எண்ணுகின்ற உள்ளூர் தொழில் முகவர் நிறுவனங்கள் தொடர்பாக கவனம் செலுத்துதல்.

v. அனுமதிப்பத்தரத்தினை புதுப்பிக்கும் போது மத்தியஸ்த, விசேட புலனாய்வு, சட்ட பிரிவுகளிடமிருந்து பெற்றுக்கொள்கின்ற அறிக்கைகளையும் தற்போது காணப்படும் முறைமையை விட பழைய முறைப்பாடுகளைத் தீர்வுசெய்வதற்கு எடுக்கும் காலத்தை அடிப்படையாகக் கொண்ட நடைமுறை யொன்றினூடாக அறிக்கைகளைப் பெற்று அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கும் போது இலகுவான நடைமுறையொன்றைப் பின்பற்றாமை

vi. போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி பணியாளர்களை வெளிநாட்டிற்கு செல்வதற்கு முடியாத வகையில் குடிவரவு குடியகல்வு திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகத் திணைக்களம் ஆகிய பிரதான நிறுவனங்களுடன் பணியகம் கூட்டிணைப்பை ஏற்படுத்துதல்.

vii. பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் ஏனைய அசாதாரணங்களுக்கு உட்படும் இடம்பெயர் பணியாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிய தொழில் முகவர்களை விசேடமாக இனங்கண்டு தொடர்ந்தும் அந்நிறுவனங்கள் ஊடாக ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதை தவிர்ப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை தயாரித்தல்.

**நிறுவனத்தின் கருத்துரைகள்**

**(3.6 ஆம் பந்திக்குரிய)**

உள்நாட்டு வெளிநாட்டு தொழில் நிறுவனங்களைப பதிவு செய்யும் போது பின்பற்றப்படுகின்ற நடைமுறைகளை மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. அனுமதிப்பத்திரங்களுக்கான விண்ணப்பதாரிகளைத் தெரிவுசெய்யும் 1985 இன் 21 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தில் அவர்கள் நன்னடத்தையுள்ள நபரொருவரா என ஆராய்ந்து பார்ப்பதே ஒரே தகைமையாக குறிப்பிடப்பட்டிருந்தது.

**(3.6.1 ஆம் பந்திக்குரிய)**

''வெளிநாட்டு தொழில் நிறுவனங்களின் அனுமதிப்பத்திரத்தை வருடாந்தம் புதுப்பிப்பதற்கு புலனாய்வுப் பிரிவின் அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அவ்வறிக்கை அதுவரை நடைபெற்ற புலனாய்வுகள் முடிவடைந்ததன் பின்னரோ அல்லது பூர்த்தி செய்யும் செயற்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் வழங்கப்படுகின்றது. இதற்குப் பின்னர் ஆண்டின் முழுக் காலப்பகுதியிலும் கிடைக்கப்பெறும் புலனாய்வினை துரிதமாக பூர்த்தி செய்வதற்கு வெளிநாட்டு தொழில் நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.''

**சிபாரிசு (3.6.2 ஆம் பந்திக்குரிய)**

''நாட்டின் சகல மாகாணங்களின் நீதிமன்றங்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களிலிருந்து மோசடி நடவடிக்கைகள் தொடர்பாக அனுமதிப்பத்திர பிரிவினால் தகவல்கள் பல சந்தர்ப்பங்களில் கோரப்படுகின்றன. புலனாய்வு நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படாமையும் அவர்களுக்காக வழங்கப்படும் நீதிமன்ற தீர்ப்புக்கள் மற்றும் தண்டனைகள் போதியளவில் இல்லாமையால் இது தொடர்ந்தும் இடம்பெறுகின்றது.''

**சிபாரிசு (3.6.2(இ) ii ஆம் பந்திக்குரிய)**

வயது குறைந்த பெண்களுக்காக போலியான ஆவணங்களை பயன்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்புதல் போன்ற சம்பவங்களினால் கடவுச்சீட்டுக்களை வழங்கும் போது போலியான ஆவணங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் போலியான ஆவணங்கள் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு அத்திணைக்களத்தில் தற்போது பொலிஸ் பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ளது.

புலனாய்வுப் பிரிவின் மூலமும் பணியாளர்கள் வெளிநாடு செல்வது தொடர்பாக கூடுதலான கவனமொன்று செலுத்தப்பட்டுள்ளதுடன் அவ்வாறான போலி ஆவணங்களை தயாரிக்கும் ஆட்கள் தொடர்பாக வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**சிபாரிசு (3.6.2 (எ) i பந்திக்குரிய)**

''வெளிநாட்டு தொழில் நிறுவனங்கள் மூலம் அங்கீகரிக்கப்பட்ட அளவில் பணம் பெற்றுக்கொண்டமைக்கான விடயங்கள் வெளியாகியிருந்ததுடன் அவ்வாறான நிறுவனங்களுக்கு எதிராக புலனாய்வுப் பிரிவின் மூலம் சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறான நிறுவனங்கள் கூடுதலாக பெற்றுக்கொண்ட பணத்தை உரிமையாளர்களுக்கு மீள அறவிட்டுக் கொடுப்பதற்கு புலனாய்வுப் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்படும்.''

**சிபாரிசு (3.6.2 (ஒ) i பந்திக்குரிய)**

இந்த பணிப்பெண்களின் பிரச்சினைகள் தொடர்பாக பணியகத்தின் மூலம் தூதுவர் அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் சவுதி அரேபியாவில் அமைந்துள்ள இலங்கை தூதரகத்தினால் பெண் ஊழியர் அலுவலகத்தின் பொறுப்பிற்கு எடுக்கப்பட்டிருந்தார். அதன் பின்னர் சவுதி அரேபியாவில் அமைந்துள்ள தூதரகத்தினால் ஊழியர் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு இந்நாட்டிற்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**(3.6.2 (ஒ) ii பந்திக்குரிய)**

இந்த ஊழியரின் பிரச்சினை தொடர்பாக கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் உள்நாட்டு தொழில் முகவர் நிறுவனத்துடன் தொடர்புகொண்டு ஊழியரை அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் தொலைபேசி மூலம் உறுதிப்படுத்திக் கொண்டு கோவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

## 3.7 பிரச்சினைகளுக்கு தூதரக மட்டத்திலான தலையிடுதல்

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் வெளிநாட்டு தொடர்பு பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகள் உட்பட இலங்கை தூதுவராலயங்களுக்கு இணைக்கபட்டிருந்த ஏனைய உத்தியோகத்தர்களினதும் வெளிநாட்டு சுற்றுலாவிற்குரிய அறிக்கைகள் மற்றும் நாளாந்தம் பத்திரிகைகளில் வெளியான அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் அத்தூதுவர் அலுவலகங்களில் அல்லது ஏனைய இடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடம்பெயர் பணியாளர்களுடன் பேசி உரிய தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

### 3.7.1 தஞ்சம்கோரி தூதுவர் அலுவலகங்களுக்கு வருகை தரும் புலம்பெயர் பணியாளர்கள்

மத்திய கிழக்கு நாடுகளில் வாழும் இலங்கை புலம்பெயர் பணியாளர்கள் சேவை புரியும் நிலையங்களில் ஏற்படும் சிக்கல்கள் காரணமாக அந்த இடங்களிலிருந்து வெளியேறி தூதுவராலயங்களில் அமைந்துள்ள பணியாளர் நலன்புரி நிலையத்திற்கு வருகை தரும் அவர்களுக்காக பாரிய கடமைப்பொறுப்பொன்று செய்யப்பட்டு வந்திருந்தமை உரிய கோவைகள் பரிசோதனையின் போது கண்டறியபட்டதுடன் கூடுதலாக பின்வரும் காரணங்கள் அடிப்படையில் புலம்பெயர் பணியாளர் தஞ்சம் கோரி எப்போதும் பிரிவுகளுக்கு வருகை தந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) உடன்பட்ட சம்பளமோ அல்லது எவ்வித சம்பளமும் கிடைக்காமை.

(ii) வேலைக்கமர்த்தும் வீட்டாளர்களினால் கூடுதலாக வேலைகளை வாங்குதல்

(iii) வேலைக்கமர்த்தும் வீட்டாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட உடல் ரீதியான /பாலியல் துன்புறுத்தல்கள்

(iv) நோய்வாய்ப்படல்

(v) வேலைக்கமர்த்தும் வீட்டாளர்களினால் உணவு பானங்கள் வழங்காமை

(vi) இலங்கையில் உறவினர்களுடன் தொடர்புகொள்ள முடியாமை

தூதுவர் அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ள தொழிலாளர் நலன்புரி பிரிவுகளிலிருந்து இந்நாட்டிற்கு வருகை தந்த 897 பெண்கள் தொடர்பாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் ஆராய்ச்சிப் பிரிவின் மூலம் 2004 ஆம் ஆண்டின் சனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டிற்குரிய ஆராய்ச்சி அறிக்கையின் பிரகாரம் அந்த அலுவலகங்களுக்கு வருகை தந்த ஆட்களில் 60% அளவு சேவை நிலையத்தில் இடம்பெற்ற துன்புறுத்தல்கள் மற்றும் போதியளவு உணவு பானங்கள் கிடைக்காததன் காரணமாகவும் 30% ஆன அளவு அதிகளவில் வேலைவாங்குதல் மற்றும் சம்பளம் கொடுக்காமையாலும் 10 % ஆன அளவிலான ஆட்களும் சேவை நிலையத்திலிருந்து தூதுவர் அலுவலகத்திற்கு ஓடி வந்திருந்தனர்.

அவ்வாறே இந்த ஆராய்ச்சி அறிக்கைகள் தரவுகளின் பிரகாரம் ஓராண்டிற்கு குறைந்த காலப்பகுதியொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆட்கள் 730 ஆகவும் 1 இற்கும் 3 இடைப்பட்ட காலப்பகுதியில் தரித்திருந்த 111 ஆட்களும் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தங்கியிருந்த 56 நபர்களும் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.7.2 தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தல்

2013 மார்ச் 28 ஆந் திகதியளவில் தொழில்நுட்ப பிரிவிலிருந்து வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிலிருந்து வெவ்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்து பணியாளர் நலன்புரி பிரிவிற்கு வந்த இடம்பெயர் பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் தீர்வு வழங்கப்பட்டமை தொடர்பான புள்ளிவிபர தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சவுதி அரேபியா | ஐக்கிய அரபு இராச்சியம் | ஓமான் | குவைட் | தோஹா கட்டார் | ஜோர்தான் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ------------ | ------------ | ----------- | ------------ | ---------- | ------------- | -------------- |
| மீண்டும் இலங்கைக்கு அனுப்புதல் | 1211 | 190 | 76 | 1464 | 05 | 875 | 3821 |
| தொழில் வழங்குனரிடம் அனுப்புதல் | 11 | 10 | 33 | 472 | - | 247 | 773 |
| முகவரிடம் ஒப்படைத்தல் | - | 75 | 51 | 1630 | 30 | 986 | 2772 |
| உரிய அதிகார சபையிடம் ஒப்படைத்தல் | 126 | 75 | - | 1075 | 319 | 218 | 1813 |
| பாதுகாப்பான வதிவில்லங்களுக்கு அனுப்புதல் | 2221 | 12 | - | 31 | 533 | 24 | 2821 |
| வேறு | 44 | 37 | 06 | 17 | 04 | 236 | 344 |
| | 3613 | 399 | 166 | 4689 | 891 | 2586 | 12344 |

இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2012 ஆம் ஆண்டில் பிரச்சினைகளை எதிர் கொண்டு மத்திய கிழக்கில் உள்ள இலங்கைத் தூதுவராலயங்களிற்கு வருகை தந்தவர்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் இலங்கைக்கும் பாதுகாப்பான வதிவில்லங்களுக்கும் அனுப்பப்பட்டனர். இதற்கமைய வெளிநாட்டில் வேலை வாய்ப்பைப் பெற்றுச் சென்றவர்கள் தமது குறிக்கோளை எய்தாமல் இலங்கைக்குத் திரும்பினர். இதற்கமைய தூதுவராலயங்கள் மற்றும் தொழிலாளர் நலன்புரிப் பிரிவு என்பனவற்றின் தலையீடு போதியதாக அமையாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது.

(ii) வெளிநாட்டிற்குச் சென்ற பின் சம்பளம் வழங்காமை அல்லது குறைந்த அளவில் வழங்குதல் அல்லது ஒப்பந்தத்தை மீறுதல் போன்ற பிரச்சினைகளில் அவர்களுக்கு உதவி வழங்குவதற்கு முன்வரக் கூடிய ஒரே நிறுவனமான அந்நாட்டில் அமைந்துள்ள இலங்கைத் தூதுவராலயத்தில் அமைந்துள்ள தொழிலாளர் நலன்புரி பிரிவு என்பதனால் அப்பிரிவின் மூலமாக எவ்வித உதவியும் கிடைக்காவிடின் அவர்கள் அதிக அசிரமங்களுக்கு ஆளாவார்கள்.

(iii) உருவாகியுள்ள சிக்கல்கள் காரணமாக புலம்பெயர் ஊழியர்கள் இலங்கைக்கு திருப்பி அமைத்து வரும் போது செலவிட வேண்டிய செலவினங்களை அவர்களாலேயே செலவு செய்வதற்கு நேரும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதால் அவர்கள் மேலும் நிர்க்கதிக்குள்ளாகின்றனர்.

(iv) விசேடமாக சவுதி அரோபியா போன்ற அளவில் பெரிய நாடொன்றொன்றிற்கு செல்லும் இடம்பெயர் பணியாளர்கள் சேவை நிலையத்தில் துஷ்பிரயோகங்களுக்கு உட்படும் போது இலங்கையின் தூதரக அலுவலகங்களுக்கோ அல்லது வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் உத்தியோகத்தர்களுக்கோ அல்லது முறைப்பாடுகளைச் செய்வதற்கு முடியாத நிலைமையொன்று காணப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களின் உயிர் மிகவும் அனர்த்தத்திற்கு உட்படுகின்றமை.

### 3.7.3 பாதுகாப்பு இல்லங்களில் காணப்படும் வசதிகள்

பல்வேறு சிக்கலான நிலைமைகளுக்கு முகங்கொடுக்கும் இடம்பெயர் தொழிலாளர்கள் நிவாரணமொன்றை எதிர்பார்த்து தொழிலாளர் நலன்புரி பிரிவிற்கு வருவதுடன், தமது பிரச்சினைக்காக தீர்வு கிடைக்கும் வரை இலங்கை தூதுவர் அலுவலகங்களை அண்மித்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு இல்லங்களில் அவர்களை தடுத்துவைத்தல் சாதாரணமான நிலைமையொன்றாகும். எனினும் இவ்வாறு தரித்து இருப்பதற்கு பெண்களுக்கு மாத்திரம் முடியுமாக இந்ததுடன், ஆண் ஊழியர்கள் இரவு காலங்களில் இலங்கை தூதகர அலுவலகத்திற்கு அண்மித்தாக திறந்த இடங்களில் தரித்திருக்க நேர்வதாகவும், தற்போது காணப்படும் பாதுகாப்பு இல்லங்களில் பெண்களுக்காக போதியளவு இடவசதிகளும் காணப்படவில்லையென்பதுடன் நோயாளியான பெண்கள் ஏனைய சாதாரன பெண்களுடன் சேர்ந்து இருப்பதற்கு நேர்கின்றமை என்பன உரிய அறிக்கைகளைப் பரீட்சித்த போது கண்டறியப்பட்டது.

அவ்வாறே தொழிலாளர் நலன்புரி பிரிவில் கூடுதலான காலம் தரித்திருப்பதற்கு பிரதானமாக பின்வரும் காரணங்கள் தாக்கமளிப்பதாக அவதானிக்கப்பட்டது.

i. விசாவை இரத்துச் செய்வதற்கு சேவை நாடுனரை கண்டு பிடிப்பதற்கு சிரமமாக இருத்தல்

ii. விசாவை இரத்துச் செய்வதற்கு பணம் இல்லாமை

iii. நிலுவை சம்பளத்தை பெற்றுக்கொள்ளும் தேவை.

iv. நோக்கத்தை நிறைவேற்றாமல் மீண்டும் இலங்கைக்கு வருவதற்கு விருப்பமின்மை

இவ்வாறான காரணங்களின் அடிப்படையில் இரண்டு ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக பாதுகாப்பு இல்லங்களில் பெண்கள் தரித்திருப்பதாகவும், சிறிய பிள்ளைகளுடன் பெண்கள் உள்ளதாகவும் ஆராய்ச்சி / கற்கை அறிக்கைகளிலிருந்து வெளிப்படுத்தப்பட்டதுடன் பின்வரும் இன்னல்களுக்கும் முகங்கொடுப்பதாகவும் வெளிப்படுத்தப்பட்டது.

i. இடவசதிகள் போதியளவு இல்லாமை
ii. மலசலகூட வசதிகள் போதியளவில் இல்லாமை.
iii. உணவு பானங்கள் போதியளவில் இல்லாமை
iv. பணம் இல்லாமையால் நோய்களுக்கு முறையாக சிகிச்சை கிடைக்காமை
v. நிலுவைச் சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பொலிசிற்கு செல்ல இடமளிக்கப்படாமை
vi. காப்புறுதி நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஆவணங்கள் இல்லாமை.

இவ்வாறு பாதுகாப்பு இல்லங்களில் தங்கியிருக்கின்ற பணியாளர்களை இலங்கைக்கு கூட்டி வருவதற்கு இலங்கை அரசு, தூதுவர் அலுவலகங்கள் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் என்பன தலையிட்ட போதிலும், அதற்காக நீண்டகாலம் எடுத்துக்கொள்ளப்பட்டதாகவும் அதன் காரணமாக வெவ்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து பின்னர் சேவை நிலையத்திலிருந்து தப்பிவரும் இடம்பெயர் தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதாகவும் மேலதிக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

இந்த பாதுகாப்பு இல்லங்களில் 100 பேருக்கு அண்மித்த அளவானோருக்கு இடவசதிகள் போதுமாக இருந்த போதிலும், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல பாதுகாப்பு இல்லங்களில் தங்கியிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை பின்வருமாறு

| பாதுகாப்பு இல்லங்கள் | தங்கியிருந்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஜோர்தான் | 243 |
| குவைட் | 346 |
| ரியாத் | 322 |

### 3.7.4 பதவியணியினர் போதுமாக இல்லாமை

இலங்கை தூதுவராலயங்களில் தொழிலாளர் நலன்புரி நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் போதியளவில் இல்லாதிருந்தமை பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

| இலங்கை தூதுவராலயங்கள் | அமைந்துள்ள நாடு | சராசரியாக ஆண்டொன்றிற்கு வெளியேறும் ஊழியர் எண்ணிக்கை | இருக்கும் பதவியணியினர் |
|---|---|---|---|
| துபாய் | ஐக்கிய அரபுகள் இராச்சியம் | 40,000 | 7 |
| அபுதாபி | | | 17 |
| ரியாத் | சவுதி அரோபியா | 70,000 | 8 |
| ஜித்தா | | | 9 |
| ஜோர்தான் | ஜோர்தான் | 10,000 | 8 |
| குவைட் | குவைட் | 45,000 | 18 |
| லெபனான் | லெபனான் | 6,000 | 4 |
| ஓமான் | ஓமான் | 6,000 | 6 |
| கட்டார் | தோஹா கட்டார் | 50,000 | 8 |

மேற்குறித்ததன் பிரகாரம் தொழிலாளர் நலன்புரி அலுவலகங்கள் மட்டத்தில் எடுக்கும் போது தற்போது சேவைபுரிகின்ற எண்ணிக்கைக்கு மேலதிகமாக வருடாந்தம் பாரியளவு ஊழியர் எண்ணிக்கை வெளிநாடு செல்வதுடன் அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளும் வெவ்வேறுபட்ட தன்மையில் அதிகரித்தும் இருந்தன. அதன் பிரகாரம் ஊழியர்களின் பிரச்சினைகளை தீர்வு செய்வதற்கு போதியளவு உத்தியோகத்தர்கள் எண்ணிக்கையொன்று இல்லாதிருந்தமை பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

i. பெண் உத்தியோகத்தர்கள் போதியளவு எண்ணிக்கையில் காணப்படாமை.
ii. மொழி பெயர்ப்பாளர்கள், தொழிலாளர் நலன்புரி பிரிவிற்கு இணைக்கப்பட்டிருக்காமையால் நீதிமன்ற நடவடிக்கைகளில் சிக்கல்கள் தோன்றியிருந்தன.
iii. தொழிலாளர் நியாய ஆலோசகர்களாக உத்தியோகத்தர்கள் காணப்படாமையால் மதியுரை செயற்பாடு மற்றும் தொழிலாளர் நலன்புரி செயற்பாடு ஒரு உத்தியோகத்தரால் நிறைவேற்றுவது சிக்கலானதாக இருந்தது.
iv. அனேகமாக இலங்கை வீட்டுப்பணிப் பெண்கள் சேவையில் ஈடுபட்டிருந்த சவுதி அரேபியாவில் அவர்களின் பிரச்சினைகளை தீர்வு செய்வதற்காக உள்ள உத்தியோகத்தர்கள் போதியளவு இல்லாமை.
v. சவுதி அரேபியாவின் தமாம் நகரிலும் அதனை சுற்றியுள்ள பிரதேசங்களில் சேவை புரிபவர்களின் பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்காக நடமாடும் சேவையொன்று

இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை நடாத்துவதற்கு முடியமான போதிலும் உத்தியோகத்தர்கள் போதியளவு இல்லாமையால் பாரிய பிரச்சினையொன்றாக இலங்கை துாதரக உத்தியோகத்தர்களினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

### 3.7.5 குறித்த நாடுகளுக்கு வருகை தந்த இடம் பெயர் தொழிலாளர்கள் பற்றிய தரவுகள் காணப்படாமை

இலங்கை பணியாளர் ஒருவரை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கும் பொருட்டு உரிய நாடுகளில் சேவை வழங்குனர் அல்லது உரிய நாடுகளின் முகவர் அலுவலகங்களினால் இலங்கை துாதர அலுவலகத்திற்கு உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். 2012 திசெம்பர் மாதத்தில் மாத்திரம் கிடைத்த அவ்வாறான தொழில் கட்டளைகளின் எண்ணிக்கை மற்றும் கிடைத்த பணம் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் மத்திய கிழக்கு நாடுகளினால் 471 கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் சுயமான பதிவுகளின் எண்ணிக்கை 2993 ஆக இருந்தது.

| இலங்கை துாதுவர் அலுவல்கள் | கிடைத்த தொழில் கட்டளை எண்ணிக்கை | | சுயமாக பதிவுசெய்த எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | தொகை ரூபா | எண்ணிக்கை | தொகை ரூபா |
| ரியாத் | 103 | 36,165 | | |
| கட்டார் | 65 | 954,013 | 816 | 4,126,105 |
| ஓமான் | 14 | 238,081 | 181 | 1,189,326 |
| வெலபனன் | 6 | 78,750 | 4 | 25,000 |
| குவைட் | 76 | 1,095,791 | 570 | 3,835,268 |
| ஜோர்தான் | 33 | 479,842 | 186 | 841,988 |
| ஜித்தா | 42 | 603,429 | 19 | 125,086 |
| துபாய் | 114 | 1,405,950 | 1,171 | 5,533,066 |
| அபுதாபி | 18 | 245,981 | 46 | 337,610 |

இவ்வாறு பெற்றுக்கொண்ட கட்டளைகள் ஊடாக ஒவ்வொரு நாடுகளுக்கும் வரும் இலங்கை இடம்பெயர் பணியாளர்களின் விபரங்கள் அந்நாட்டிற்கு வந்த திகதி வெளியேறிய திகதி போன்ற விடயங்கள் தொடர்பான அறிக்கை அந்த இலங்கை துாதுவர் அலுவலகங்கள் மூலம் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. இதனால் ஏற்படும் அரச யுத்த நிலை அனர்த்தத்தின் போது அவர்கள் தொடர்பாக தகவல் அறிக்கையிடுவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. எடுத்துக் காட்டாக குவைட்டில் ஏற்பட்ட யுத்த நிலைமைகளின் பின்னர் இலங்கை தொழிலாளர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 2,260,225 தொகை தொடர்பான சரியான தரவுகள் இன்மையால் பணியகத்தின் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

அவ்வாறே இடம்பெயர் பணியாளர்கள் காணாமல் போன சம்பங்கள் தொடர்பாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் மூலம் முறைப்பாடுகளை செயற்படுத்தும் போது அவர்கள் வேலைக்கு இருந்த பிரதேசம் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு இதனால் முடியாமல் இருந்ததாக அவதானிக்கப்பட்டது.

### 3.7.6 பாதுகாப்பு வசதிகள்

பாதுகாப்பு இல்லங்களில் நிவாரணம் தேடி நாளொன்றுக்கு 10-15 இடம்பெயர் பணியாளர்கள் வருவதாகவும் அவ்வாறு ஒரு நாளில் வரும் ஒவ்வொரு நபருடைய பிரச்சினைகளை வெவ்வேறாக தீர்வு செய்வதற்கும் உரிய தரவுகளை தொடர்புபடுத்துவதற்கும் காலமொன்று செலவிடப்படுவதால் அந்நபர்களை பாதுகாப்பு இல்லங்களில் தங்கியிருக்கும் காலத்தை குறைப்பது சிக்கலானதாக இருப்பதாலும் இதன்

காரணமாக அரேபிய எஜமானர்கள் தொழில் நலன்புரி அலுவலகங்களுக்கு நுழைந்து உத்தியோகத்தர்களுக்கு அடித்துவிட்டு பணியாளர்களை அழைத்துச் செல்வதற்கு முயற்சி செய்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டதாகவும் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் இல்லாமை பாரிய பிரச்சினையொன்றாக சவூதி அரேபியா மற்றும் ஜோர்தான் நாடுகளுகளில் காணப்படுவதாகக் இலங்கை தூதரங்களின் உத்தியோகத்தர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

### 3.7.7 பௌதீக வசதிகள்

இலங்கை தூதரக அலுவலகங்கள் தொடர்பாக பல்வேறு கல்வி / ஆராய்ச்சி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்ததன் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள வசதிகள் அந்த தூதுவர் அலுவலகங்களில் இணைக்கப்பட்டிருந்த பணியாளர் நலன்புரி பிரிவுகளில் காணப்படாமை அல்லது போதியளவு இல்லாமை காரணமாக இடம்பெயர் பணியாளர்களுக்கு நலன்புரி அலுவல்களை வழங்குவது சிக்கலாக இருந்ததாக வெளிப்படுத்தப்பட்டது.

(i) சவூதி அரேபியாவில் அமைந்துள்ள இலங்கை தூதுவர் அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டிருந்த தொழிலாளர் நலன்புரிச் சேவைகளை Fax இயந்திரம் காணப்படாமை

(ii) போக்கவரத்து வசதிகள் போதியளவு இல்லாமை.

### 3.7.8 இடம்பெயர் பணியாளர்களின் பிரச்சினைகளுக்காக தலையிடுதல்

ஈராக் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கை தூதரக அலுவலகங்களில் இருந்த முன்னால் செயலாளரொருவரால் 2013 சனவரி 27 ஆந் திகதி ஞாயிறு லங்கா தீப பத்திரிகைக்கு தெரிவித்த கருத்துக்களின் பிரகாரம் 2013 ஜனவரி 09 ஆந் திகதி தலை துண்டிக்கப்பட்டு மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்ட சிறுமியின் மரணம் தொடர்பாக இலங்கை தூதரக அலுவலகங்களின் ஈடுபாடு தொடர்பான கருத்துரைகள் பின்வருமாறு காணப்பட்டது.

i. முதல் சந்தர்ப்பத்தில் அவருக்கு தூதரகத்தின் உத்தியோகத்தர்களினதும் மொழி பெயர்ப்பாளர்களின் சேவையும் பாதுகாப்பும் கிடைக்காமை

ii. இந்த ஒத்துழைப்பு முதல் சந்தர்ப்பத்திலேயே அவருக்கு கிடைத்திருந்தால் இடம்பெற்ற உண்மையான சம்பவங்கள் நீதிமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்டு அவருக்கு கிடைத்த தண்டனையை மாற்றுவதற்கு இடமிருந்ததாக அவரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

iii. இலங்கை தூதரகத்திற்கும் பொலிசிற்கும் இடையே நேரடியாக தொடர்பொன்று இல்லாதிருந்ததாகவும், எந்தவொரு குற்றறச்சாட்டின் பேரில் அல்லது வெளிநாட்டு ஊழியர் ஒருவரை கைது செய்தால் அது தொடர்பில் பொலிசாரால் உத்தியோகபூர்வமாக தூதரகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டிய கடப்பாடொன்று இல்லாதிருந்தமையால் தமது நாட்டிற்குரிய இடம்பெயர் பணியாளர் தொடர்பான பிரச்சினைகளை ஏனைய இலங்கையளர்களினாலோ அல்லது பத்திரிகைகள் மூலமோ தெரிந்து கொள்ள வேண்டியேற்படுகின்றதென அவரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

iv. ஆதலால் கடுமையான குற்றச்சாட்டின் பேரில் இலங்கையரொருவர் கைது செய்யப்பட்டால் உடனடியாக இலங்கை தூதரகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமெனவும் தூதரக உத்தியோகத்தர்கள் முன்னிலையில் அல்லாமல் இடம் பெயர் பணியாளரின் வாக்கு மூலம் பெறக்கூடாது எனவும் அரச மட்டத்தில் உடன்படிக்கையொன்று / கோட்பாடொன்று உருவாக்கப்பட வேண்டுமென யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது.

v. அவ்வாறே தவறொன்றுக்கு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இடம்பெயர் பணியாளர்களுக்காக துரித சட்ட உதவிகள் முறைமையொன்று தூதரக மட்டத்தில் காணப்படாமை மிகவும் சிக்கலானதொன்றாகவும் இந்நிலைமையினால் அநேகமாக பிரதிவாதிகளுக்காக அந்நாட்டு அரசினால் சம்பளம் பெறும் சட்டத்தரணிகளே நீதிமன்றத்தில் முன்நிற்கின்றனர். அவர்களிடமிருந்து உயர்ந்த சேவையொன்றை இலங்கையருக்கு எதிர்பார்க்க முடியாதிருப்பதாகவும் இதனால் அரசின் செலவில் கூட உதவிகளை வழங்குவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பணியாளர் நலன்புரி உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக மொழி அறிவுள்ள பொருத்தமான சட்ட உத்தியோகத்தரொருவர் தூதரகத்திற்கு இணைக்கப்பட வேண்டுமெனவும் யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது.

**மதிப்பீடு**

i. பாதுகாப்பு இல்லங்களில் காணப்படும் இடவசதிகள் போதியளவில் இல்லாததன் காரணமாக இடம்பெயர் பணியாளர்கள் சிரமங்களுக்கு உள்ளாகியிருத்தல்.

ii. தொழிலாளர் நலன்புரி அலுவலகங்களுடன் தொடர்புடைய நலன்புரி உத்தியோகத்தர்கள் போதியளவில் இல்லாமையால் ஊழியர்களின் பிரச்சினைகளுக்காக துரித தீர்வினை வழங்குவதற்கு முடியாதிருந்தமை.

iii. பாதுகாப்பு இல்லங்களில் தங்கியிருக்கும் பெண்களுக்காக பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் இல்லாமையால் ஒரு தலைப்பட்சமான தன்மையிலிருப்பதால் அவர்களின் உளநிலைக்கு பொருத்தமற்றதாக இருத்தல்.

iv. தொழிலுக்காக வெளிநாடு சென்று மீண்டும் திரும்பி நாட்டிற்கு வரும் பணியாளர்கள் தொடர்பான தரவு முறைமையொன்று இல்லாமையால் அவர்கள் தொடர்பாக பிரச்சினையான நிலைமையொன்றின் போது துரித தீர்வுகளை வழங்குவதற்கு முடியாதிருத்தல்.

v. ஒவ்வொரு நாடுகளிலும் சேவைக்காக செல்லும் இலங்கையாகள் இலங்கை தூதுவர் அலுவலகங்களின் தொழிலாளர் நலன்புரி பிரிவுடன் தொடர்புபடாமல் சேவை நிலையத்துடன் தொடர்புபடுத்துவதனால் அன்னியோன்ய அறிவுடன் கூடிய தன்மையொன்று இல்லாமையால் தூதரக உத்தியோகத்தர்களுக்கு அவர்களை தொடர்புகொள்ள முடியாதிருந்தது.

**பரிந்துகைள்**

i. குடிவரவு குடியகள்வு திணைக்களத்துடன் இணைந்து குடிபெயரும் பணியாளர்கள் தொடர்பான தகவல் உள்ளடக்கப்பட்ட ஒட்டுமொத்த தரவு முறையொன்றை துரிதமாக ஸ்தாபித்தல்.

ii. பாதுகாப்பு இல்லங்களுக்கான வசதிகளை போதியளவில் உருவாக்குதல்.

iii. நலன்புரி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் அதன் மூலம் குடிபெயரும் பணியாளர்களின் பிரச்சினைகளுக்காக துரித தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

iv எண்ணக்கரு ரீதியான மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்காக இந்த வதிவிட பெண்களுக்காக நாளாந்தம் ஏதேனும் நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்து அவர்களின் காலத்தை பயனுள்ள வழிக்கு திருப்புதல் (தையல், தியான நிகழ்ச்சிகள்,மொழி வளர்ச்சி நிகழ்ச்சிகள்)

v. தொழில் பெறுவோர் கூடுதலாக உள்ள இடங்களில் செயலமர்வுகளை நடாத்தி அக்குடிபெயர் பணியாளர்களை அறிவூட்டுதல்

vi. பாதுகாப்பு இல்லங்களுக்கு வருகை தரும் குடிபெயர் பணியாளர்கள் தொடர்பாக தகவல்களை துரிதமாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு பெற்றுக்கொள்ளக்கூடிய முறையொன்றை தயாரித்தல்.

vii இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு தொழிலுக்காக செல்லும் போதும் இலங்கை தூதரக மட்டத்தில் தரவுகளைப் பராமரித்துச் செல்லல், அதன் மூலம் அவசர யுத்த சந்தர்ப்பங்களின் போது குடிபெயர் பணியாளர்களுக்கு நலன்புரி நடவடிக்கைகள் வழங்குவதற்கு திட்டமிடல்.

viii வீட்டுப் பணிப்பெண்களாக பெண்களை அனுப்பப்படுவதை கட்டுப்படுத்துவதற்கு கிராம மட்டத்தில் காணப்படும் பெண்கள் அமைப்புக்களுக்கு இடையில் சென்று அதன் உறுப்பினர்களை அறிவூட்டுமாறு சவூதி அரேபியாவில் அமைந்துள்ள இலங்கைத் தூதுவரால் அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே வீட்டுப் பணிப்பெண்களாக அனுப்புவதை மட்டுப்படுத்த உயர்ந்த சம்பளங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஏனைய தொழில்கள் கூடியளவில் காணப்படுவதால் அதற்காக பணியாளர்களை அனுப்ப வேண்டுமென ஏனைய நாடுகளின் இலங்கை தூதுவர்களாலும் யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருப்பதால் அந்த யோசனைகளை செயற்படுத்துதல்.

ix. பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படும் நபர்களைத் தொடர்புபடுத்திய உள்நாட்டு வெளிநாட்டு தொழில் முகவர்களுக்கு மீண்டும் மீண்டும் பணியாளர்களை பெற்றுக்கொள்ள முடியாத வகையில் வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துதல்.

x. ஜோர்தானிலுள்ள இரண்டு ஆடைக் கைத்தொழிற்சாலைகளில் ஊழியர் நலன்புரி மிகவும் நல்ல முறையில் அளிக்கப்படும் இரண்டு நிறுவனங்களாகவும், தற்போது இருக்கும் இலங்கையருக்கும் மேலதிகமாக தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கு விரும்புவதாகவும், பயிற்சிபெறாத ஊழியர்களை பயிற்சியளித்து ஆரம்பத்திலிருந்து பயிற்சியுடனான சம்பளம் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளாதாகவும் அந்நாட்டிற்கு 2012 ஆம் ஆண்டின்போது கல்விச் சுற்றுலாவிற்கு சமுகமளித்த உத்தியோகத்தர்களால் குறிப்பிடப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ஜோர்தானில் வீட்டுப் பணிப்பெண்கள் முகங்கொடுக்கும் சிக்கல்களுக்கு தீர்வொன்றாக வீட்டுப் பணிப்பெண்களை அனுப்பாமல் ஆடைத்தொழிற்சாலைக்கு பணியாளர்களாக அந்நாட்டிற்கு தொழிலுக்காக அனுப்புவதற்கு பெண்களை உட்சாகப்படுத்தல்.

**பணியகத்தின் கருத்துரை**

(பரிந்துரைக்காக)

குறித்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பாக எனது நேரடி கவனம் செலுத்தப்பட்டது. அவதானிக்கப்பட்ட காரணங்கள் அதிகளவில் உண்மையானதாக இருப்பதுடன் அக்குறைப்பாடுகளை இல்லாமல் செய்வதற்கு தற்போது தேவையான நடவடிக்கைகளை எடுத்திருப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

எடுத்துக்காட்டாக சவூதி அரேபிய இராச்சியத்தில் சேவைக்காக வெளிநாடு செல்லும் எண்ணிக்கை சராசரியாக 70,000 ஆக இருப்பதாக உங்களால் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் ரியாத் தூதரகத்தில் சேவைபுரியும் பணியாளர்கள் 8 பேராக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

இப்பதவியணியினர் குடிபெயர் ஊழியர்களின் பிரச்சினைகள் உட்பட வெளிநாட்டு தொழில்துறையின் அபிவிருத்திக்காக தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

''இக்குறை தொழிலின்மைக்கான தீர்வாக கௌரவ அமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம் சவூதி அரேபியாவின் தமாம் நகரில் பணியகத்தின் உத்தியோகத்தர்களுடன் கூடிய தூதுவர் அலுவலகமொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.''

''இப்பரிந்துரைகள் பணியகத்தின் ஒட்டு மொத்த செயற்பாடு மற்றும் ஒன்றோடொன்று ஒன்றுடன் தெளிவுபடுத்தல் தொடர்பு விளக்கப்பட்டுள்ளது. அவ்வாறே அவதானிப்புக்களின் செல்லுபடித்தன்மை தொடர்பாக விவாதிக்க வேண்டியதில்லையெனவும் எதிர்காலத்தில் உயர் மட்ட முகாமைத்துவத்துடன் விரிவாக கலந்துரையாடியதன் பின்னர் இங்கு சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதாகவும் உரிய பிரிவுகள் மூலம் அறிக்கையிடப்பட்டிருந்தன.

## 4. முடிவுரை

i. இலங்கையர் தொழிலுக்காக வெளிநாடு செல்வதில் முன்னேற்றம் ஏற்பட்டதுடன் அவர்களுக்கு ஏற்படும் சிக்கல்களும் அதிகரித்திருந்தன. இந்த சிக்கல்களை ஆக்கபூர்வமாக தீர்வு செய்வதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் செயற்பட வேண்டிய போதிலும் அந்தப் பிரச்சினைகள் உருவாகும் மூலங்கள் இணங்கானப்பட்டு அதற்கான தீர்வுகளை காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

ii. உடல், உள தகைமைகளைக் கொண்டிராத தொழிலாளர்கள் உட்பட சிறிய பிள்ளைகள் இருக்கின்ற தாய்மார்கள் வெளிநாடு செய்வதால் அதிகமான ஊழியர் பிரச்சினைகள் ஏற்பட்டிருப்பதால் இலங்கை மத்திய கிழக்கு நாடுகளுடன் மேற்கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் சேவைக்கு பொருத்தமான ஊழியர்களை வெளிநாட்டிற்கு அனுப்புவதில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கவனம் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

iii. நடைமுறையிலுள்ள பயிற்சி பாடநெறிகள் முறைகளில் குறைபாடுகள் காரணமாக அதிகமான ஊழியப் பிரச்சினைகள் தோன்றியுள்ளதுடன் அவற்றை குறைப்பதற்கும் வெளிநாட்டு தொழில் வாய்ப்புத் துறையினூடாக வெளிநாட்டு நாணயமாற்று உழைப்பினை விரிவாக்குவதற்காகவும், பல்வேறு தொழில்துறையை இலக்காகக் கொண்டு பயிற்சி பாடநெறிகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

iv. இலங்கையிருந்து வெளிநாட்டுத் தொழிலுக்காக இலங்கையர் குடியகழ்தல் மற்றும் வேலையை முடித்து இலங்கைக்கு திரும்பி வருதல் என்பவற்றை கணிப்பிடுவதற்காக தரவு வங்கியொன்றை நிறுவுதல் மற்றும் பேணிச் செல்லும் முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அது குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களம் மற்றும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் என்பவற்றிற்கிடையே தொடர்பாடல் கூட்டிணைக்கப்பட்ட தரவு முறைமையொன்று இல்லாமையால் போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு பணியாளர்கள் வெளிநாட்டிற்கு அனுப்பப்படுவதை கட்டுப்படுத்த முடியாதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

v. தொழில் முகவர் நிறுவனங்களின் பதிவு மற்றும் ஒழுங்குபடுத்தும் முறைமையில் குறைபாடுகள் காணப்படுவதால் வெளிநாடு செல்வதற்கு முன்னரும் சேவையில் ஈடுபடும் போதும் புலம்பெயர் ஊழியர்களுக்கு அதிகளவில் சிக்கல்கள் ஏற்படுவதால் தொழில் முகவர் நிலுவைகள் முகாமைப்படுத்தி திருத்தம் செய்ய வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

vi. மத்திய கிழக்கு நாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதரங்களில் தாபிக்கப்பட்ட தொழிலாளர் அலுவலகங்களிலிருந்து புலம்பெயர் ஊழியர்களுக்கு அவற்றில்

பௌதீக வசதிகளில் குறைபாடு, மனித வளங்கள் போதியளவில் காணப்படாமை, எதிர்பார்க்கப்பட்ட சேவைகள் கிடைக்கப்பெறாமை, அவ்வசதிகள் சேவைகள் மேலும் முன்னேற்றப்பட்ட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

vii. முழுமையாக நோக்கும் போது தொழிலாளர்களிடமிருந்து இலங்கைக்கு கிடைக்கும் அந்நியச் செலாவணி பெறுமதியுடையதாக இருந்த போதிலும் சமூக ரீதியில் விஷேடமாக பெண்கள், வீட்டுப்பணிப் பெண்கள் வெளிநாடு செல்வதால் இலங்கை சமூகத்திற்கு பாதகத்தை உண்டுபன்னுவதாகவுள்ளது. அதனால் பெண்கள் வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு செல்வதற்கு காட்டும் அக்கரைக்கு சிறந்த பயிற்சியளித்தல், ஊழியர்களை பல்வேறுபட்ட தொழிலுக்காக வெளிநாடு செல்வதை ஊக்குவித்தல் பொருத்தமானது என நிர்மாணிக்கப்பட்டது.